Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி—22 | 08—11—2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை—264



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

T.P:0712-610008

(சி-13213)

# ஒட்டுப்படைக்கு இராணுவம் ஆட்பிடிப்பு; ஏமாற்றியும் இளைஞர்கள் இணைப்பு!

## புலிகளிடம் சரணடைந்த மூவரினால் மேலும் பல இரகசியங்கள் அம்பலம்

(மட்டக்களப்பு)

*தம்முடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படையினரான கருணா குழுவினருக்கு சிறிலங்கா இராணுவத்தினர் இளைஞர்களையும், சிறுவர்களையும் பிடித்துக்கொடுப்பதாகவும் வேறு சிலரைக் கருணா குழுவினரே ஏமாற்றி இணைத்துக்கொள்வதாகவும், ஒட்டுக்குழுவில் இருந்து விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ள மூவர் வெ[illegible]வித்துள்ளனர்.*

ஒட்டுப் படையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த மூன்று இளைஞர்கள் இந்த உண்மையினை ஊடகவியலாளர்களிடம் பகிரங்கப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பு கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நேற்று பி.ப.4.00 மணிக்கு நடைபெற்றது. (12ஆம் பக்கம் பார்க்க)



## தபால் மூல வாக்களிப்பில் யாழ். இல் அரச ஊழியர் அக்கறை காட்டவில்லை

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் அதிகமான அரச உத்தியோகத்தர்கள் வாக்களிக்காது விட்டுள்ளார்கள் கடந்த காலத்தில் அரச உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்பில் காட்டும் அக்கறையை இம்முறை காட்டவில்லை.

தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கும் போதே அதிகமான அரச உத்தியோகத்தர்கள் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்காது விட்டமையும் நேற்று இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் கூட வாக்களிப்பில் அக்கறைகாட்டாத நிலைமை காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் துப்பாக்கிச்சூடு!

திருகோணமலை அபயபுரச் சந்தியில் நேற்றுப் பகல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. உந்துருளியில் வந்தவர்களால் சந்திக்கு அருகில் நின்றவர்கள் மீது இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது ஹிஸ்மத் என்ற குளிர்பான பாரஊர்தியில் பணியாற்றும் ஊழியர் காயமடைந்துள்ளார். (32)

## நவீன் திசாநாயக்க அம்பலப்படுத்திய சதி ரணிலுக்கு சந்திரசேகரன் கடும் எச்சரிக்கை!

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக அமைதிப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் ரணில் விக்கிரமசிங்க செயற்படுத்தி வரும் சதித் திட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் நவீன் திசாநாயக்க அம்பலப்படுத்தியதையடுத்து அக்கட்சியை ஆதரிக்கும் மலையக மக்கள் முன்னணி க[illegible] எச்சரிக்கை விடுத்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்;

வடக்கு கிழக்கில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைக்க இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைப்படைகளை பயன்படுத்தினாலோ அந்நிய நாட்டுப் படைகளை வரவழைத்தாலோ ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை நாம் விலக்கிக் கொள்வதோடு சனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் வேட்பாளருக்கு எதிராக நாம் செயற்படுவோம்.

நவீன்திசாநாயக்க தெரிவித்திருக்கும் சதி தொடர்பாக உரிய விளக்... (12ஆம் பக்கம் பார்க்க)

-வடக்கு கிழக்கு படையினரின்-

## அஞ்சல் மூலவாக்கு விண்ணப்பங்கள் 40 வீதமானவை நிராகரிப்பு

வடக்கு கிழக்கில் பணியாற்றும் படைத்தரப்பினரின் 40 வீதமான அஞ்சல் மூலவாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. படைத்தரப்பினரில் பெரும்பாலானோர் தமது விண்ணப்பங்களில் தேர்தல் தொகுதி, மாவட்டம், முகவரி போன்றவற்றை முறையாகக் குறிப்பிடாமை காரணமாகவே அவை நிராகரிக்கப்பட்டுள்ளன. தமது விண்ணப்பங்களை உரிய முறையில் திருத்துவதற்கு படைத் தரப்பினர் முயற்சிகளை மேற் கொண்டபோதும் அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (32)

## பொய் முறைப்பாடு செய்த மங்களவிற்கெதிராக நடவடிக்கை

### -ஐ.தே.க.இலஞ்ச ஊழல்ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக பொய்யான முறைப்பாடு ஒன்றை ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தமைக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.பிழையான பிரச்சாரங்கள் மூலம் மக்களை தவறான வழியில் இட்டு செல்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கலாம் என்ற அடிப்படையிலேயே இந்த முறைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டுள்ளது. (32)

## தமிழர் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் கிளி. வெகுசன அ.ஒன்றியம் கோரிக்கை

(கிளிநொச்சி)

வரலாற்றினை அனுபவங்களாகப் பெற்ற தமிழ் மக்களாகிய நாம் சனாதிபதித்தேர்தலைப் புறந்தள்ளி வாக்களிப்பில் இருந்து விலகிக் கொள்வோம்.

எம்மையும் எமது இனத்தின் இருப்பையும் அழித்தொழிப்பதற்கு உறுதியுடன் போட்டியிடும் வேட்பாளர்களையும் சனாதிபதித் தேர்தலையும் தமிழ் மக்களாகிய நாம் நிராகரிப்போம் என கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தமிழ் மக்களைக் கேட்டுள்ளது.

அது நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா சனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவோ மகிந்தராஜபக்ஷவோ அல்லது பெரும்பான்மை (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. இராணுவத்தைக் கலைக்கக் கோருவதற்கு புலிகளுடனான புரிந்துணர்வே காரணமாம்!

### எதிர்க்கட்சித்தலைவர் ரணில் கூறுகின்றார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இதுவரை ஜே.வி.பியினருக்கு எதிராகச் செயற்படவில்லை. அதேபோல ஜே.வி.பியினரும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயற்படவில்லை. ஆனால் இரண்டு தரப்பினரும் படையினரையும் பொலிசாரையுமே தாக்கியுள்ளனர். இருதரப்பாருக்குமிடையே இவ்வாறு ஒரு புரிந்துணர்வு இருப்பதால்தான் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இராணுவத்தைக் கலைக்குமாறு கூறியிருக்கிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றிரவுதொலைக்காட்சி ஒன்றினூடாக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள், ஊனமுற்ற படையினர் ஆகியோரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், படையினருக்கு ஆயுத தளபாடக் கொள்வனவு மேற்கொள்வதில் பிரித்தானியாவில் கடைப்பிடிக்கப்படும் முறையையே எனது அரசாங்கமும் கடைப்பிடிக்கவுள்ளது. இதனால் விரையங்களைத் தடுக்கலாம். (12ஆம் பக்கம் பார்க்க)

## கூலித் தொழிலாளி சுட்டுக்கொலை

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை கூலித் தொழிலாளியான வேலாயுதம் ஞானசேகரம் (வயது-40)என்பவர் அடையாளம் தெரியாத நபர்களினால் வயல் வெளியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மேசன் தொழிலாளியான அவர் தொழில் முடித்து சாகமம் வீதி வழியாக வீடுநோக்கி திரும்பிக் கொண்டிருந்தபோது உந்துருளியில் எதிர்கொண்ட நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றதாக அக்கரைப்பற்று சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர்.

## வரிவிளம்பரம்

### Wep Site Designing

உங்களது வியாபார நிறுவனங்களைச் சர்வதேச ரீதியில் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்திடவும்,வியாபார நிறுவனத்தின் பெயரில்

**இணையத் தளங்களை பதிவு செய்து உருவாக்கிடவும்,**

***தொடர்புகட்கு:-***

வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி,கிளிநொச்சி (சி.13074)


# குற்றச்சாட்டு

நுவரெலியா நகரில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலர் எஸ் சதாசிவத்துக்குஒருகோடி ரூபா பெறுமதிகொண்ட காணி வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். மாநகர முதல்வர் என்ற அடிப்படையில் தமக்குத்தெரியாமல் குறித்த காணிநகரஅபிவிருத்தி சபையினால் சதாசிவத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.(32)

# இடியுடன் மழை பெய்யலாம்

நாட்டின்பல பகுதிகளிலும் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம் என வளிமண் டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக சிறியளவான மண்சரிவு ஏற்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் எஸ். எச்.காரியவசம் தெரிவித்துள்ளார்.இதேவேளை தற்சமயம் நாட்டில் நிலவும் காலநிலை காரணமாக மண்சரிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தேசிய கட்டட ஆய்வுகள் மையம் எச்சரித்துள்ளது. மையத்தின் புவிப்பிரிவினர் விடுத்துள்ள எச்சரிக்கையில் 60 வீத மண்சரிவுகள் கடும் மழை பெய்யும் காலங்களிலேயே ஏற்படும் எனத் தெரிவித்துள்ளனர். எனவே மண்சரிவு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் இடங்களில் வசிப்போர் அவதானமாக இருக்குமாறு அவர்கள் பொது மக்களைக் கேட்டுள்ளனர். (32)

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த அடம்பனில் விழிப்புணர்வு நிகழ்வு

மன்னார் மாவட்டத்தில் கட்டாக்காலிக் கால்நடைகளைக்கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

அடம்பன் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் ஆட்காட்டிவெளி கமநல சேவைத்திணைக்களமும் இணைந்து கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தினர். (40)


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## 2006 ஆம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

கீழ்குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில் அதன் எதிரே குறிப்பிடப்படும் காலப்பகுதிக்குரிய கேள்விகள் 22.11.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்கள் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் 22.11.2005 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமும் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் கேள்விகள் இதேதினம் 22.11.2005 பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும். கேள்வித் தொகையுடன் மேலதிகமாக 15%பெறுமதி சேர் வரியும் (வற்வரி) செலுத்தப்படவேண்டும்.

இணைப்பிரதிகளாக வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தின் மூலப் பிரதியை "**செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை**" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படவேண்டும். கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்**" என்ற முகவரிக்கு இதே நேரத்தில் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விபரம் | குத்தகைக் காலம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் | பெறுமதி சேர் (வற்) வரி |
|---|---|---|---|---|---|
| 01. மின் சந்தை வல்வெட்டித்துறை (நகராட்சி மன்ற எல்லை முழுவதும் அறவிடலாம்) | 01.01.2006 முதல் 31.03.2006 வரை | 8,250/- | 1,000/- | 100/- | 15% |
| 02. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம். | 01.01.2006 முதல் 31.12.2006 வரை | 62,700/- | 1,000/- | 100/- | 15% |
| 03. மாட்டிறைச்சிக் கடை. வல்வெட்டித்துறை | 01.01.2006 முதல் 31.12.2006 வரை | 155,000/- | 1,000/- | 100/- | 15% |
| 04. தொண்டைமானாறு பேருந்து நிலைய சிற்றுண்டி சாலை | 01.01.2006 முதல் 31.12.2006 வரை | 5,400/- | 1,000/- | 100/- | 15% |

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
03.11.2005 (சி-13313)

**நா.தம்பிராசா,**
செயலாளர்,
நகராட்சி மன்றம் வல்வெட்டித்துறை.


# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு திருமலையில் வீடுகள் கையளிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மற்றும் மூதூர் கிழக்கு கிராமங்களில் வாழுகின்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்கும் திட்டம் ஒன்றை சமுதாய முன்னேற்ற நிலையம் செயற்படுத்துகின்றது. இத்திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது வீடு, கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி. எழிலனால் முதலாவது பயனாளிக்குக் கையளிக்கப்பட்டது.

வீட்டைத்திறந்து வைத்த பின்னர், அதன் திறப்பை சம்பூர் -ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட திருமதி வீரபத்திரர் பகவதிப்பிள்ளையிடம் எழிலன் கையளித்தார். கிளிநொச்சியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சமுதாய முன்னேற்ற நிலையத்தின் பணிப்பாளர் ஜி.நிரோஷன் மூன்றரை இலட்சம் ரூபா செலவில் வீடு நிர்மாணிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் பேசும் போது " கடல் கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் அவர்களின் புனர்வாழ்வுக்குமே தன்னார்வ அமைப்புக்கள் பல முன்னுரிமை கொடுத்து பணிபுரிகின்றன. ஆனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு குறித்து இத்தன்னார்வ அமைப்புக்கள் அக்கறை செலுத்துவதாகக் காணப்படவில்லை" என்று குறிப்பிட்டார். (25)

# சனாதிபதித்தேர்தலை முன்னிட்டு பாரவூர்தி போக்குவரத்து இல்லை

சனாதிபதித்தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் ஏ -9 சாலையின் ஓமந்தை ஊடான பார ஊர்தி போக்கு வரத்துக்கள் இடம்பெறமாட்டாது என வவுனியா அரச செயலகத்தில் நேற்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.அதேநேரம் பயணிகள் போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.இராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் ஆகியோருக்கிடையில் இடம்பெற்றகூட்டத்தில் வாக்காளர்கள் எவரும் தம்முடன் பொதிகளை எடுத்து வரக்கூடாது என்ற அறிவுறுத்தலை விடுப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. (3[illegible])

# யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வியியற்றுறை வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற்றுறையின் வெள்ளிவிழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கைலாசபதி கலையரங்கில் கல்வியியற்றுறைத்தலைவர் மா.சின்னத்தம்பி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்.பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர்.

யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைக்கு பெரும் பங்காற்றியமைக்காக மூத்த கல்விமான்களான கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் லால்பெரேரா,கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறைத்தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம், பேராசிரியர் சபாஜெயராசா ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# மாவடிக்கிராமத்தில் 60 பேருக்கு உதவி

(வட்டக்கச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் கிளி.கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் போருட் நிறுவன நிதி உதவியுடன் வட்டக்கச்சி மாவடிக் கிராமத்தில் 60 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. கோழிவளர்ப்பு, ஆடுவளர்ப்பு, மலசல கூடம், பழமரக் கன்று, சிறுவியாபாரம், தையல் மெசின்,நன்னீர்மீன்பிடி, கிடுகு வழங்கல், பொதுக்கிணறு அமைப்பு என்ற அடிப்படையில் 60 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (12)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவன புதிய கட்டடத் திறப்புவிழா

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் புதிய அலுவலகக் கட்டடத்திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

நாளை 9ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு உருத்திரபுரம் கூழாவடியில் மேற்படி புதிய அலுவலக கட்டடம் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# துயிலுமில்லத்தில் சிரமதானம்

மாவீரர் தினத்தினை முன்னிட்டு அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தை செம்மலை மகாவித்தியாலயம், அலம்பில் றோ.க.பாடசாலை மாணவர்கள் இணைந்து சிரமதானப்பணியினை மேற்கொண்டுள்ளனர். (20)

# நித்திரையிலிருந்த குழந்தை அரவம் தீண்டிப் பலி

(வலிகாமம்)

படுக்கையில் வைத்து சிறுமி ஒருவரை அரவம் (பாம்பு) தீண்டியதில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் உடுப்பிட்டி நாவலடிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த முருகையா- ரூபிகா(வயது-3) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் அதிகாலை வேளை பாயில் படுத்திருந்த குழந்தை திடீரென வீறிட்டு அழுதவேளை, அவ்விடத்திற்குச் சென்ற தாயார் விஷப்பாம்பைக்கண்டு அடித்துள்ளார்.

உடனே அருகிலுள்ள விஷக்கடி வைத்தியரிடம் சென்று சிறுமியைக் காட்டி வைத்தியம் செய்தனர். அதன் பின்னர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியிலேயே சிறுமி உயிரிழந்தார்.

பிரேதப் பரிசோதனைகளையடுத்து சிறுமியின் சடலம் உறவினர்களிடம் நேற்று இரவு கையளிக்கப்பட்டது. (37)

# மன்னார் கடலில் கொந்தளிப்பு; மீனவரைக் காணவில்லை

(மன்னார்)

மன்னார் கடலில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பும் அதனுடன் கூடிய பலத்த காற்றினாலும் தலைமன்னார் பழைய பாலம் தென்கடலில் தொழிலுக்குச்சென்ற மீனவர் ஒருவர் படகு கவிழ்ந்ததில் காணாமல் போயுள்ளார்.

காணாமல் போனவர் நீர்கொழும்பைச்சேர்ந்த கிளி ஐயா (வயது-34) எனத் தெரியவந்துள்ளது.

பழைய பாலம் கடற்கரையிலிருந்து காணாமல் போன மீனவரும் மற்றுமொரு மீனவரும் கரையிலிருந்து இரண்டு கிலோமீற்றர்கள் தூரம் கடலில் செல்கையில் கொந்தளித்துக்கொண்டிருந்த கடல் தாக்கத்திலும் கடும் காற்றிலும் அவர்களது படகு சிக்கிக் கவிழ்ந்துள்ளது.

படகில் சென்ற ஒருவர் மட்டும் கரை திரும்பிய நிலையில் மற்றொரு மீனவர் காணாமல் போயுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஐந்து மணியளவில் நடந்த போதும் இதுவரை காணாமல் போனவர் கரை சேரவில்லை. அவரைத்தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் மீனவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

# உருத்திரபுரம் மாணவர்களுக்கு பல்சுகாதார விழிப்புணர்வூட்டல்

உருத்திரபுரம் சிவநகர் பாடசாலை மாணவர்களுக்கு பல்சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டலும், அதனை தொடர்ந்து பற்சிகிச்சையும் நேற்று இடம்பெற்றன. இதில் 300இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கிளிநகர் பகுதி உணவகங்கள் தமிழீழசுகாதார சேவையினரின் ஒழுங்கமைப்பில் நேற்று ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அங்கு காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டதுடன் தரமற்ற நிலையில் காணப்பட்ட உணவுகளும் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு காணப்பட்ட கழிவுகள் அனைத்தும் பிரதேச சபையின் உதவியுடன் அகற்றப்பட்டும் உள்ளது. இந் நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவையினரும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும், பிரதேச சபையினரும் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் மீண்டும் சூறாவளி; 24 பேர் பலி; 1000 வீடுகள் தரைமட்டம்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவை நேற்று மீண்டும் சூறாவளி தாக்கியுள்ளது. இதில் 24 பேர் பலியானதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 1000வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.**

அட்லாட்டி மற்றும் கரிபியன் கடல் பகுதியில் கற்றீனா, ரீற்றா எனப் பல்வேறு பெயர்களில் உருவான சூறாவளி அமெரிக்காவில் புளோரிடா, லூசியானா, அலபாமா, மிசிசிப்பி ஆகிய மாகாணங்களைத் தாக்கியது. 1000இற்கும் மேற்பட்டவர்கள் இதில் பலியானார்கள்.

கியூபா, மெக்சிக்கோ நாடுகளையும் இந்தச் சூறாவளிகள் தாக்கி கடும் சேதத்தை ஏற்படுத்தின. சூறாவளி பாதிப்பில் இருந்து அமெரிக்க மக்கள் இன்னும் மீளாத நிலையில் அமெரிக்காவின் இன்டியானா மாகாணத்தை மீண்டும் சூறாவளி நேற்றுத் தாக்கியது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்ட மானது. 24 பேர் இதில் பலியாகி விட்டனர்.

250 கிலோமீற்றர் வேகத்தில் இச் சூறாவளி தாக்கியுள்ளது. வீதிகளில் நிறுத்தப்பட்டு இருந்த கார்கள் தூக்கி வீசப்பட்டன. கென்டகி பகுதியிலும் இந்தப் புயல் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்கா இன்டியானா மாநிலத்தில் நேற்று வீசிய சூறாவளியால் சின்னாபின்னமாகிய வாகனத்தரிப்பிடமொன்றைப் பார்வையிடும் பாதுகாப்பு அதிகாரி.



பாரிஸில் இளைஞர்கள் மேற்கொண்டுவரும் கலவரத்தின் போது வாகனமொன்றின் மீது வைக்கப்பட்ட தீயை அணைக்கும் தீயணைப்புப் படை வீரர்.

# வன்முறை முடிவுக்குக் கொண்டுவரப்படும்; பிரான்ஸ் சனாதிபதி அறிவிப்பு

(பரிஸ்)

பிரான்சில் அதிகரித்து வரும் வன்முறைகளை முடிவிற்கு கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டப் போவதாக பிரான்ஸ் சனாதிபதி ஜக்சிராக் கூறியுள்ளார். பிரான்சில் தற்போது வன்முறைகள் மிகவும் மோசமாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பிரான்ஸ் சனாதிபதி வன்முறைகளை முடிவிற்கு கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டப்போவதாக கூறி சில மணித்தியாலங்களின் பின்னர் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதினொராவது நாளாகவும் பிரான்சில் தொடரும் வன்முறை காரணமாக பத்து பொலிசார் படுகாயமடைந்துள்ளதுடன் இருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் பொலிசார் கூறியுள்ளனர். பிரான்சில் முக்கிய நகரங்களில் இந்த வன்முறைகளின் போது 1300இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீவைத்துக் கொழுத்தப்பட்டுள்ளன. இந்த வன்முறையில் ஈடுபட்ட 349 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். பரிஸில் புறநகர் ஒன்றில் ஆபிரிக்க இளைஞர்கள் இருவர் பொலிசாருக்கு அஞ்சி மின் மாற்றி நிலையமொன்றிற்குள் ஒழித்திருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்ததையடுத்து இந்த வன்முறைகள் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைத் தீர்க்க நீதிமன்றங்கள்

காஷ்மீரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைத்தீர்க்க மக்கள் நீதிமன்றங்கள் செயற்படவுள்ளன.

காஷ்மீரில் கடந்த மாதம் ஏற்பட்ட பூகம்பத்தில் ஏராளமானோர் பலியாகினர். பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைக் கண்டறிந்து தீர்வுகாண மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. பூகம்பத்தால் மோசமாக சேதமடைந்த தஸ்தார், யூரி பகுதிகளில் மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். நிவாரணப்பணிகள், நஷ்டஈடு தொடர்பான குறைகள் மீது மக்கள் நீதிமன்றங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்று ஜம்முகாஷ்மீர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பஷீர் அகமதுகான் தெரிவித்தார்.

கமல்கோட், சலமாபாத், கஸ்தான் தகி, உருசா, போனியர் ஆகிய இடங்களிலும் மக்கள் நீதிமன்றங்கள் செயற்படும் எனவும் அவர் கூறினார்.

# பாகிஸ்தானில் பூகம்ப அதிர்வு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் நேற்று முன்தினம் பூகம்ப அதிர்வு ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் இது ஆறு எனப் பதிவாகியது.

ஒக்ரோபர் 8 ஆம் திகதி ஏற்பட்ட படுபயங்கர பூகம்பத் தாக்குதலில் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆசாத் காஷ்மீர், மற்றும் ஜம்மு காஷ்மீர் போன்றவை சீர்குலைந்தமை தெரிந்ததே.

இந்த நிலையில் பாகிஸ்தானிலும் ஆஷாத் காஷ்மீரிலும் நேற்று முன்தினம் அதிகாலை 7.42 மணியளவில் மீண்டும் பூகம்ப அதிர்வு ஏற்பட்டது. பெஷாவர் நகருக்கு 200 கி.மீ வடகிழக்கே உள்ள பகுதியை மையமாக வைத்து இந்தப் பூகம்ப அதிர்ச்சி உருவானது.

பாகிஸ்தானின் தலைநகரமான இஸ்லாமபாத் பெஷாவர் நகரம் மலாகண்ட் ஸ்வாட், பாலாகோட், ரவ்லாகோட், மனோசரா பாக் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தலைநகரமான முசபராபாத் ஆகிய இடங்கள் பூகம்ப அதிர்வால் குலுங்கின. பூகம்ப அதிர்வு ஏற்பட்டதும் மக்கள் வீடுகள் மற்றும் தற்காலிக கூடாரங்களை விட்டு வெளியே ஓடி வந்தார்கள். ஆனால் பூகம்ப அதிர்வால் உயிரிழப்புகளோ, காயங்களோ பொருட்சேதமோ ஏற்படவில்லை.

# கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டில் சீனா முதலிடம்

(பீஜிங்)

சீன நாட்டவர்களே கையடக்கத் தொலைபேசிகளை அதிகளவு பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

110 கோடிக்கு மேல் மக்கள் தொகை உள்ள சீனாவில் கையடக்கத் தொலைபேசி வைத்திருப்பவர்கள் 38 கோடி பேர் ஆகும்.

கடந்த செப்ரெம்பர் மாதம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி 37 கோடியே 60 இலட்சமாக இருந்தது. கடந்த 2004 ஆம் ஆண்டு இது 26 கோடியாக இருந்தது.

2010 ஆம் ஆண்டு சீனாவில் கையடக்கத் தொலைபேசி வைத்திருப்பவர்கள் எண்ணிக்கை 60 கோடியைத் தாண்டும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் சுற்றுலாத் துறையில் வளர்ச்சி அடைந்த ஷாங்காய் மாகாணத்தில் தான் அதிகமானவர்கள் கையடக்கத்தொலைபேசி பயன்படுத்துகிறார்கள்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் சீனாவுக்கு அடுத்த நிலையில் உள்ளன.

151 பயணிகளுடன் சோமாலியாக் கரையிலிருந்து 160 கிலோ மீற்றர் தூரத்தில் பயணம் செய்துகொண்டிருந்த உல்லாசப் பயணிகள் கப்பலொன்று ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளானது. கடந்த சனிக் கிழமைநடந்த இச்சம்பவத்தில் ஏவுகணைவெடிக் காததால் தப்பிக் கொண்டகப்பலே இதுவாகும்.





ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடக்குப் பகுதியிலுள்ள ரல் அபார் எனும் இடத்தில் மண் மூட்டைகளால் அமைக்கப்பட்ட அரணினுள் உள்ள அமெரிக்க சிப்பாய் ஒருவர். அண்மையில் இப்பகுதியில் ஈராக்கியமற்றும் அமெரிக்கப் படைகள் வீடுவீடாகத் தேடுதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரமாண்ட கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் பண்டிகை அடுத்த மாதம் வர இருப்பதைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் தாத்தாக்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் தொடங்கிவிட்டன. கிறிஸ்மஸ் தாத்தா சிலைகளும் தயாராகி வருகின்றன.

அமெரிக்காவின் மிக்சிகன் மாகாணத்தில் உள்ள மிட்லாந்தில் கிறிஸ்மஸ் தாத்தா பயிற்சிப்பள்ளி உள்ளது. 1937 ஆம் ஆண்டு முதல் இந்தப்பள்ளியில் பல்வேறு நாடுகளிலிருந்தும் கிறிஸ்மஸ் தாத்தா பயிற்சிக்கு மாணவர்கள் வருகின்றார்கள்.

அந்தப்பள்ளியில் பிரமாண்ட கிறிஸ்மஸ் தாத்தா சிலை அமைக்கும் பணியில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த கிறிஸ்மஸ் தாத்தா சிலையின் தலையின் உயரம் மட்டும் 15 அடி ஆகும்.

# சோமாலியா பிரதமர் மீது வெடிகுண்டு வீச்சு

(மகாதிசு)

சோமாலியா பிரதமர் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கொலை முயற்சியில் இருந்து அவர் தப்பி விட்டார். அவரது பாதுகாவலர்கள் மூன்று பேர் இதில் பலியாகி விட்டனர்.

இடைக்கால அரசின் பிரதமரான முகமது கெடி நேற்று முன்தினம் விமான நிலையம் சென்று விட்டு தலைநகர் மகாதிசுவுக்கு காரில் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது இவரது எதிர்பார்ப்பாளர்கள் காரை நோக்கி சரமாரியாகச் சுட்டனர். வெடிகுண்டுகளையும் வீசினார்கள்.

இதையடுத்து பின்னால் வந்த பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். நீண்ட நேரம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் பிரதமரின் பாதுகாவலர்களில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

ஆனால் பிரதமர் முகமது கெடி அதிஷ்டவசமாக உயிர்தப்பி விட்டார். கூடுதல் இராணுவத்தினர் வந்ததைத் தொடர்ந்து தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

# மன்னார் முள்ளிக் குளத்தில் மாவீரர்தினம் தொடர்பில் கலந்துரையாடல்

(மடு)

மாவீரர் நாளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

முள்ளிக்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் உதயன் தலைமையில் மாலை நான்கு மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் முள்ளிக்குள கமக்காரர் அமைப்பு, கிராம முன்னேற்றச் சங்கம், நன்னீர் மீன்பிடிச்சங்கம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இச் சந்திப்பின் போது கிராம வளர்ச்சி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.(40)

# மடுக்கோவில் பிரதேசத்தில் கால்நடைகளின் தொல்லை

(மடு)

மன்னார் மடுக்கோவில் பிரதேசத்தில் இரவில் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. பண்டிவிரிச்சான் தட்சனா மருதமடு கிராமங்களிலுள்ள கால்நடைகள் மடுக்கோவில் பகுதியில் இரவில் வந்து தங்கி அப்பிரதேசத்தை அசுத்தம் செய்து வருவதால் இவ்விடயத்தில் கால்நடை வளர்ப்போர் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (40)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பாராட்டு

(வட்டக்கச்சி)

கிளி.இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் தரம் 05 புலமைப் பரீட்சையில் சித்தி எய்திய 10 மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 04 மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.



படம்:- ரூபன்

இந் நிகழ்வில் சித்தி எய்திய மாணவர்கள் கௌரவ சீருடை அணிந்து அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராசா, கிளி. மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் ஆகியோர் மாணவர்களை வாழ்த்தினார்கள். அத்தோடு பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கு அவர்களது படம் பொறிக்கப்பட்ட கேடயங்களும் மற்றைய நால்வருக்கும் கேடயங்களும் வழங்கப்பட்டன அத்தோடு கற்பித்த ஆசிரியருக்கு 10 மாணவர்களின் படம் பொறிக்கப்பட்ட கேடயத்தையும் குருகுலராசா வழங்கிக்கௌரவித்தார்.

-இராணுவத்தின் மண் அரண் காரணமாக

# வழிந்தோட முடியாத நிலையில் வீதியை மூடியுள்ள வெள்ளம்

(அலுவலக செய்தியாளர்)

தற்போது பெய்து வரும் மழை காரணமாக மழை வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் வீதிகளில் தேங்கி நிற்பதன் காரணமாக பரந்தன் குமரபுரம் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதனை காணக்கூடியதாகவுள்ளது.

பரந்தன் குமரபுரம் 9ஆம் வீதியை குறுக்கறுத்து வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக அப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாது பெரும் அவலங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்கால்களை மூடி மண் அரண்களை முன்பு இராணுவத்தினர் அமைத்துள்ளதன் காரணமாக மழை வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் குடியிருப்புப் பகுதிகளில் மழை வெள்ளம் தேக்கம் கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதே போன்று கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி வளாகத்தை அண்டிய பகுதிகளிலும் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட மண் அரண்கள் அகற்றப்படாமையின் காரணமாக மழை வெள்ளம் கல்லூரி வளாகத்தில் தேங்கம் கொண்டுள்ளது இதன் காரணமாக கல்லூரி மாணவர்கள் முதல் ஆசிரியர்கள் வரை பலத்த சிரமங்களுக்கு ஆளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மாத்தளன் பகுதி தற்காலிக முகாமில் சேதமடைந்துள்ள மலசலகூடங்கள்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களை குடியமர்த்தியுள்ள மாத்தளன் பகுதி தற்காலிக முகாமிற்குரிய மலகூடங்கள் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் மக்கள் சுகாதார ரீதியாக அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக அம் முகாமின் தலைவர் கருத்து வெளியிடுகையில்; இந்த வருடம் 02 ஆம் மாதமளவில் எங்களுக்குரிய முகாம்கள் அமைத்துத் தரப்பட்டன. இதன் போது தான் இந்த மலகூடங்களும் அமைக்கப்பட்டன. கடந்த ஆகஸ்ட் மாதம் கழிவகற்றுவதற்காக இம் மல கூடங்களின் மேற்பகுதி அகற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து கடந்த வாரமளவிலும், இதே செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அகற்றப்பட்ட குழிகளின் மேற்பகுதி இதுவரை புனரமைக்கப்படவில்லை. இதனால் தற்போது பெய்து வரும் மழை காரணமாக நீர் உட்புகுந்து பல சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்தோடு தற்போது துர்நாற்றம் வீசி வருவதால் மக்கள் இவற்றைப் பயன்படுத்த முடியாமல் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்கு குடியிருக்கின்ற மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும், பின் தங்கியவர்களாக இருப்பதனால் மக்களால் இவற்றை புனரமைக்க முடியாதுள்ளது. இவற்றை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்ட போதும் இதுவரை எந்தவித ஆக்க பூர்வமான செயற்பாடுகளும் நடைபெறவில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளார். அத்தோடு நிரந்தரமான புனரமைப்பு செயற்பாட்டை மேற்கொள்ளாவிடினும், தற்காலிகமான புனரமைப்புச் செயற்பாட்டையாவது மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளார். (ச.தி)

# முல்லையில் தொடரும் கனமழையினால் தற்காலிக குடியிருப்புகளிலுள்ளோர் பாதிப்பு

-நீர்தேங்கியுள்ளதால் சுகாதாரச் சீர்கேடு

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழைகாரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புக்களில் வாழும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

தற்காலிக குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்த அரசசார்பற்ற நிறுவனங்கள் எதுவும் இதுவரை தமதுவீடுகளை வந்து பார்வையிடவில்லையெனவும் தற்காலிக குடியிருப்புக்களில் வாழும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். குடியிருப்புக்களில் நீர்தேங்கி நிற்பதால் நோய் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (20)

# ஐரோ. தேர்தல் கண்காணிப்பாளர் இன்று திருமலைக்கு விஜயம்

ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜோன் குஷ்நாகன் இன்று திருகோணமலைக்கு விஜயம் செய்கின்றார். அவர் திருகோணமலையில் திருமலை அரச அதிபர் மற்றும் தேர்தல் உதவி ஆணையாளர் ஆகியோரைச் சந்தித்து சனாதிபதித் தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பற்றி ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் மாலை கிளப் ஓசியானிக் ஹோட்டலில் ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் குஷ்நாகன் உள்ளூர்ச் செய்தியாளர்களைச் சந்திக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது (25)

# முள்ளியவளை முறிப்புக் கிராமத்தில் விசேட மருத்துவ முகாம்

(முள்ளியவளை)

முறிப்பு கிராம மக்களின் நன்மை கருதி தண்ணீரூற்று சத்தியசாயி சேவாவின[illegible] விசேட மருத்துவ முகாம் ஒ[illegible] நேற்று முன்தினம் முறிப்பு கி[illegible] பொது நோக்கு மண்டபத்தில் இ[illegible] பெற்றுள்ளது.

[illegible] கிராமம் பின் தங்கிய கிராமமாக இருப்பதோடு போக்குவரத்துச் செய்வதற்கான வீதிகள் [illegible] மோசமாகப் பாதிப்படைந்துள்ளதனாலும், அருகில் எந்த மருத்துவ சேவையும் இல்லாத [illegible] கருத்திற் கொண்டு இந்த மருத்துவ முகாம் சேவை ஆரம்பிக்கப்பட்டதாக சத்தியசாயி சேவா உறுப்பினர் ரகுநாதப்பிள்ளை தெரிவித்துள்ளார். இம் மருத்துவ முகாமில் நோயாளிகளுக்கான சிகிச்சைகளை வவுனியா ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், முல்லை மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலை வைத்தியர்களும், மேற்கொண்டமை குறிப்பிடத்தாகும்.

இந்த மருத்துவ சேவை தொடர்ந்து ஒரு மாதத்தில் இரு ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20)

# கிளி.மாவட்டத்தில் முதற்தடவையாக சிறுவர் அரங்க விழா



படம்:- சோதி

(அலவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண சிறுவர் அரங்க விழா 2005' நேற்று முன் தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வித் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் தலைமையில் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை கணக்காளர் நல்லதம்பி, கிளி.மத்திய கல்லூரி முதல்வர் ஆர்.இராஜமகேந்திரன் ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழக் கல்விக்கழக செயற்றிட்டப் பொறுப்பாளர் நா.ப. இளவழுதி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட பள்ளிகளின் அரங்கச் செயற்பாடுகள் மேடையேற்றப்பட்டன.

மாலை நேர நிகழ்வுகள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராசா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழீழ நுண்கலைத் துறை அதிபர் தணிகை மாறனும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த எழிலன்பனும் கலந்து கொண்டு அரங்க விழாவில் பங்கு பற்றிய மாணவர்கள், அரங்க நிகழ்ச்சி பயிற்சி ஆசிரியர்கள் பங்கு பற்றிய பாடசாலைகளுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

மேற்படி அரங்க நிகழ்வில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை, பூநகரி கறுக்காய் தீவு. ம.வி, பூநகரி ஞானிமடம் அ.த.க பாடசாலை, கிளி தருமபுரம் ம.வி, பளை றோ.க.த பாடசாலை, கிளாலி றோ.க.த பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதற்தடவையாக மேற்படி சிறுவர் அரங்க விழா சிறப்பாக நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# குடாநாட்டில் தொடரும் சோதனைக் கெடுபிடி
# பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு கெடு பிடி நடவடிக்கைகளும் அராஜகங்களும் அதிகரித்துள்ளன.**

**அண்மைக்காலமாக இராணுவம் மீது இனம் தெரியாதோர் கும்பல்கள் நடத்தும் தாக்குதல்களினால் மிகவும் பீதியடைந்துள்ள இராணுவம் இதனைக் காரணம் காட்டிப் பொது மக்கள் மீது பல்வேறு விதமான கெடுபிடிகளையும் மேற்கொண்டு வருகிறது.**

பொது மக்களது மனநிலையை கவனத்தில் எடுக்காது தமது இராணுவ நலனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இராணுவத்தினர் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகளால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடுவோரைச் சந்திக்குச் சந்தி நின்று வழி மறிக்கும் இராணுவம் அவர்களை அடையாள அட்டைச் சோதனை உடற்சோதனை கடும் விசாரணை என்பனவற்றுக்கு உட்படுத்துவதுடன் அவர்கள் எடுத்துச் செல்லும் கைப்பை மற்றும் உடமைகளையும், சோதனை செய்கின்றனர். மோட்டார் வாகனங்களில் செல்வோரிடம் இவ்வாறான கெடுபிடிகள் கடுமையாக மேற்கொள்ளப்படுகின்றன.

இதை விட இராணுவ பாதுகாப்பு வலயப் பகுதியில் கடற்றொழிலுக்குச் செல்வோர் விவசாய நடவடிக்கைகளுக்காகச் செல்வோர் மீதும் படையினர் பாஸ்கெடுபிடி சோதனைக் கெடுபிடி என்பனவற்றை மேற்கொள்கின்றனர்.

இதனால் பொது மக்களது இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## காணாமல் போனோரின் விபரம் தமிழ்தேசிய கூட்டமைப்பு சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

1996/1997ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களின் விபரங்களை சேகரிக்கும் செயற்பாட்டில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் முதற் கட்டமான பதிவுகள் எதிர்வரும் 12.11.2005 (சனி) 13.11.2005 (ஞாயிறு) திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. எனவே ஏற்கனவே காணாமல் போனோர் சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் அனைவரையும் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து விபரங்களை சேகரிக்க உதவுமாறு காணாமல் போனோர் சங்கச் செலாளர் கேட்டுள்ளார்.

## ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் வறிய குடும்பங்களுக்கு மலசலகூடம்

(வலிகாமம்)

யாழ். வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் வாழும் வறிய குடும்பங்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

அந்த அடிப்படையில் வலிகாமம் தெற்குப் பகுதியில் வாழ்கின்ற வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களை இனம் கண்டு அவர்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்காக முதற் கட்ட உதவியாக 20மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த காலத்தில் யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் அற்று வாழ்விடங்களில் வாழ்ந்து வரும் மக்களின் நலனைக் கவனத்தில் கொண்டே ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (UNICEF) இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (33)

## வெளிவாரி பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் நிதியுதவி

வெளிவாரியாக பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை விருத்தி செய்வதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன்.அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

வெளிவாரியாக பட்டக் கல்வியைத் தொடரும் மாணவர்கள் திருப்திகரமான முறையில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற வசதிகளை இலங்கை அரசாங்கமோ- திறந்த பல்கலைக்கழக நிர்வாகமோ ஏற்படுத்தவில்லை.

இதனால் மாணவர்கள் எதிர் கொள்ளக்கூடிய சிக்கல்களைத் தீர்த்து வைக்கவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சி செயற்பாட்டிற்கான ஆற்றல் விருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கான திட்டங்களை அமுல் செய்வதற்காகவுமே இந் நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிரதேச வெளி வாரி மாணவர்களது கல்வியை வளம்படுத்துவதற்கான ஏற்பாடுகளுக்கு முன்னுரிமையளித்து செயற்படுத்தவும், திட்டமிடப்பட்டுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொலைக்கல்வி செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அதிகாரிகள் கூறினர். (33)

## சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகம்; புறக்கணிக்கப்பட்டோர் விபரம் திரட்டல்

யாழ்.குடாநாட்டில் அரசினால் வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களது விபரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகிறது.

இந்த விபரம் சேகரிப்பு நடவடிக்கைகள் யாவும் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்பவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக என்று சமுர்த்தி நிவாரணத்திட்டத்தின் யாழ்.மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் கூறினார்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த உலருணவு நிவாரண உதவியை நிறுத்திய சிறிலங்கா அரசு மக்களுக்காக சமுர்த்தி நிவாரண விநியோகத்திட்டம் ஒன்றை முன்வைத்து அந்நிவாரண விநியோகத்தை பெறுவதற்காக நிவாரண முத்திரைகளையும் விநியோகம் செய்தது.

எனினும் இந் நிவாரணமுத்திரை விநியோகத்தில் குறைபாடுகள் இருப்பதாகவும் சமுர்த்தி நிவாரண உதவி பெறத்தகுதியுடைய பலர் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தரப்பில் இருந்து யாழ். அரச அதிபர்கணேசிற்கு பலமுறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இம்முறைப்பாடுகளை கவனத்தில் கொண்டு நிவாரணமுத்திரைகளைப் பெறத்தகுதியிருந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களை இனம் கண்டு அவர்களுக்கும் சமுர்த்தி நிவாரண முத்திரைகளை விநியோகிப்பதற்காகவே இவ்விபரம் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## பலப்படுத்தப்படும் படை முகாம்கள் குடாநாட்டு மக்கள் மத்தியில் பீதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவத்தினர் மிகவும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மீதும் பொலிசார் மீதும் இனம் தெரியாதோரால் நடத்தப்பட்டு வரும் திடீர் தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள பரபரப்பான சூழலையடுத்தே இராணுவத்தினர் தாம் நிலை கொண்டுள்ள படை முகாம்களையும் காவலரண்கள் மற்றும் மினி முகாம்களையும். தீவிரமாகப் பலப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் கைவிடப்பட்ட காவலரண்கள் மண் அணைகள் முட்கம்பி வேலிகள் என்பனவற்றையும் பதுங்கு குழிகளையும் படையினர் மீண்டும் புதுப்பித்து பலப்படுத்துவதுடன் சில இடங்களில் புதிய காவலரண்கள் பதுங்கு குழிகள், வேலிகள் என்பனவற்றையும் அமைத்து வருகின்றனர். அத்துடன் இராணுவம் மிகுந்த உசார் நிலையில் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதனால் பொது மக்களிடையே யுத்த பீதியும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. (33)

## பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தமிழ் மொழி மூல பாடசாலைகள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசினால் அமுல் செய்யப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள 204 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதில் 157 சிங்கள மொழி மூலப் பாடசாலைகளும், 47 தமிழ்மொழி மூலப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் பெரும்பாலும் வடக்கு கிழக்குப் பகுதிகளிலேயே உள்ளன. இவற்றில் கணிசமான எண்ணிக்கையான பாடசாலைகள் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் இடம் பெயர்வுகள் என்பனவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டு வளப்பற்றாக்குறைகளுடனேயே காணப்படுகின்றன.

எனவே அரசின் மேற்படி பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளே அதிகமாக உள்வாங்கப்பட வேண்டிய தேவை உள்ள போதும் அபிவிருத்திக்கான பாடசாலை தெரிவில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை புறக்கணித்து விட்டு சிங்கள மொழி மூலப் பாடசாலைகளை இத் திட்டத்தில் அரசாங்கம் அதிகளவில் உள்ளீர்த்துள்ளது.

இவ்வாறான தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் அபிவிருத்தியைப் புறக்கணித்து தமிழ் மாணவர்களது கல்வி எதிர்காலத்தை பாழடையச் செய்ய முயலும் அரசின் செயல் இனவாதப் போக்கை தெளிவுபடுத்துவதாக உள்ளது என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## சுட்டிலக்கம் தபால் மூலம்

சைவபரிபாலன சபையினரால் எதிர்வரும் சனிக்கிழமை நடத்தப்படும் சைவநெறித் தேர்வுக்குரிய சுட்டிலக்கம், இணைப்பிரதி விபரம் என்பன தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இது வரை கிடைக்கப்பெறாதோர் காரியாலயத்தில் தொடர்புகொள்ளுமாறு யாழ். சைவபரிபாலனசபை அறிவித்துள்ளது.

## உயிலங்குளம் கிராமத்தில் கமக்கார அமைப்புக்கள் சந்திப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உயிலங்குளம் கிராமத்தில் கமக்கார அமைப்புக்களுக்கான பொதுக்கூட்ட நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

உயிலங்குளம் மாவீரர் படிப்பகத்தில் பெரும் பாக உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம், தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இம்முறை பெய்து வரும் பருவமழையை அண்மித்து பெரும் போக நெற்செய்கைக்காக விவசாயிகளை ஊக்குவித்தல் நெற் வயல்களுக்கு நீர்பாய்ச்சும் வாய்க் கால்களை சிறந்த முறையில் சீர்படுத்தல், அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன் கொண்டு செல்லுதல், எதிர்வரும் மாவீரர் தினத்தை மிகவும் சிறப்புடன் கிராம மக்கள் செயற்படுத்தல் போன்ற பல கருத்துக்களை துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார் துணுக்காய் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் செ. புனிதன் ஆகியோர் வழங்க சிறப்புரையை பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் ம.இன்பபாலன் நிகழ்த்தினார். நிகழ்வில் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

## நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தெரிவு


யாழ். மாவட்ட கலை கலாச்சாரப் பேரவையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தெரிவு யாழ். செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

தலைவராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேசும், துணைத் தலைவராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் செயலாளராக கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மெயிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர்களாக 29 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (37)

# உணவுக்காக எண்ணெய்
# இந்திய வெளியுறவு அமைச்சர் ஊழல்?

இந்திய மத்திரயசிற்கு போதாத காலம் போலும். ஏதாவது ஒரு சிக்கலில் தலையை உடைத்துக் கொண்டு தான் இருக்கின்றது. மாறிமாறி ஏதாவது ஒரு பிரச்சினை முளை விடத் தவறுவதில்லை. இவ்வளவுநாளும், சீக்கியர் படுகொலையும், நானாவதி கமிஷன் அறிக்கையும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதன் சூடு தணிவதற்குள் மற்றோர் வடிவத்தில் சிக்கல் தலைதூக்கியுள்ளது.


சதாம்


அத்வானி

அந்த வகையில் வெளியுறவுத் துறையமைச்சர் நட்வர்சிங் சிக்கல்களுக்குள் மாட்டிக்கொண்டுள்ளார். டில்லியில் தீவிர வாதிகளின் தாக்குதலில் 60 இற்கும் மேற்பட்டோர் பலியானதை விடவும், நட்வர்சிங் விவகாரம் டில்லியை அதிர வைத்துக் கொண்டிருக்கின்றது எனலாம்.

வெளியுறவுத்துறை அமைச்சர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று எதிர்க் கட்சி தனது தாரக மந்திரத்தை ஓதத் தொடங்கியுள்ளது. சிக்கலில் வெளியுறவுத் துறை அமைச்சர் மாட்டியுள்ளாரா... இல்லையா.. தகவல்கள் உண்மையா... பொய்யா... என்றெல்லாம் எதிர்க்கட்சி ஆராய முன் வரவில்லை பிரச்சினையா... சிக்கலா... உடனடியாக சம்பந்தப்பட்டவர் பதவி விலக வேண்டும் என்று அடம் பிடிப்பதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங்கிற்கு யாது நடந்துள்ளது..? ஏன் எதிர்க்கட்சிகள் கோஷமிடுகின்றன..? மத்தியரசின் நடவடிக்கை எவ்வாறு உள்ளது..? என்பதை நோக்கின்.

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் உணவிற்காக விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட எண்ணெய் வர்த்தகத்தில் ஊழல் செய்ததாகவும், அவ்வாறான ஊழலுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் தொடர்பு பட்டுள்ளதாகவும், ஐ.நா வோல்கர் குழு அறிக்கை வெளியிட்டதையடுத்தே டில்லி யில் புயல்மையம் கொண்டிருக்கின்றது.

அது மட்டுமன்றி வோல்கர் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள மற்றோர் விடயமும் டில்லியில் அதிர்வுகளை ஏற்படுத்தாமல் இல்லை. ஐ.நா வோல்கர் குழு அறிக்கையில் காங்கிரசின் பெயரும் இழுத்து விடப்பட்டிருக்கின்றது. அதாவது காங்கிரஸ் கட்சியும் ஈராக்கில் வெளியுறவுத் துறையமைச்சர் செய்த ஊழலுடன் தொடர்புடையது என்று வோல்கர் குழு அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.

இதனையடுத்தே மத்தியரசு நாளுக்கு நாள் வோல்கர் குழுவின் அறிக்கை புயலினால் தவித்துக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவசர அவசரமாக பிரதமர் தலைமையில் இராணுவ அமைச்சர் பிராணப் முகர்ஜி மற்றும் மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றார். இந்த ஆலோசனைக் கூட்டம் ஏன் அவசர அவசரமாகக் கூட்டப்பட்டது. அப்படியெனில் "மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம் உருவாகும்" என்பதாய் காங்கிரஸ் ஊழலில் ஈடுபட்டு விட்டதா.. என எதிர்க்கட்சி ஆதாரங்களைத் தேடித் கொண்டிருக்கின்றது என்றால் மிகையில்லை.


ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சியின் போது ஐ.நாசபை ஈராக் மீது பொருளாதாரத் தடையினை 2001 இல் விதித்திருந்தது. இதன் காரணமாக ஈராக் உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாட்டை எதிர்கொண்டது. இதனால் ஐ.நா சபை உணவுக்கு எண்ணெய் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்தது.

இதன்படி உலகிலுள்ள தனி நபரோ, அமைப்புகளோ ஐ.நா சபை நிர்ணயித்த விலையில் கச்சா எண்ணெயினை ஈராக்கிடம் பெற்றுக் கொள்ள முடியும். அதற்குப் பதிலாக உணவு மற்றும் மருந்துகளை ஈராக்கிற்கு வழங்க வேண்டும்.

ஆனால் ஐ.நா சபை வகுத்த விதிகளை சதாம் ஹுசைன் மீறினார். சட்ட விரோதமாக ஐ.நா நிர்ணயித்த விலையிலும், கூடுதலாக10 முதல் 30 சதவீதம் வரை கூடுதலான விலையில் (சர்வதேச சந்தைவிலையினை விடவும் குறைவு) விற்றுப் பணத்தை சதாம் ஹுசைன் பெற்றுக் கொண்டதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.


மன்மோகன்சிங்


சோனியா


நட்வர்சிங்

அந்த வகையில் சதாம் ஹுசைன் சட்ட விரோத ஒப்பந்தங்கள் மூலமாக 8,100 கோடியை (1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) சுருட்டி விட்டதாகவும், இது ஊழல் என்றும் கூறப்படுகின்றது.

ஐ.நா சபையின் விதிமுறைகளை மீறியதை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவே வோல்கர் குழு ஆகும். பால்வோல்கர் தலைமையில் தென் ஆபிரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி, சுவிஸ்நாட்டு சட்ட வல்லுனர்கள் அடங்கிய குழு விசாரணைகளை முடுக்கி விட்டிருந்தது. அதன் பெறுபேறாக 2500 நிறுவனங்கள் சதாம் ஹுசைனிடம் ஆதாயம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்த 2500 நிறுவனங்களில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங்கும் காங்கிரசும்கூட உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து வெளியுறவு துறை அமைச்சருக்கு வில்லங்கம் ஆரம்பமானது. நட்வர்சிங் 2001 ஆம் ஆண்டு மார்ச் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் நான்கு முறை 19 இலட்சம் பெரல் கச்சா எண்ணெய் தனது மகனுடன் பெற்றுள்ளதாகவும், "மாஸ் பீல்டு" ஏ.ஜி என்ற சுவிஸ் நிறுவனம் மூலமாக அது பரிமாறப்பட்டதாக வோல்கர் அறிக்கை கூறுகின்றது.

இதற்காக எம். 09/54 எனும் எண்கொண்ட ஒப்பந்தம் சதாமுடன் நட்வர்சிங் செய்துள்ளதாகவும், 2.25 கோடிரூபா (5 இலட்சம் அமெரிக்க டொலர்கள்)சதாம் கைக்கு கைமாறியதாகவும், அறிக்கை விரிகின்றது.

இதனையடுத்தே நட்வர்சிங் விழி பிதுங்கி நிற்கின்றார் எனலாம். வோல்கர் அறிக்கை சரியானதா பிழையானதா.. என்பதை நட்வர்சிங் தான் கூற வேண்டும் ஆனால் நட்வர்சிங் கூறுவதை எதிர்க்கட்சிகள் கேட்கத் தயாராக இல்லை. பதவி விலகி விட்டு மிகுதியைக்கூறு என்பதாக எதிர்க்கட்சி கணை தொடுத்திருக்கின்றது.

அடுத்து காங்கிரஸ் கட்சி சார்பிலும். வோல்கர் குற்றம் சுமத்தியிருக்கின்றது. இதற்காக எம்/10.57/ எனும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 10 இலட்சம் பெரல் கச்சா எண்ணெய் சட்ட விரோதமாக பெற்றுள்ளது. சதாமுக்கு 1.13 கோடி (2.5 இலட்சம் அமெரிக்க டொலர்கள்) காங்கிரஸ் வழங்கியுள்ளதாக அறிக்கை பகருகின்றது.

இதனையடுத்து காங்கிரஸ் கட்சியும் கூட குளிர் காய்ச்சலில் உள்ளது. எதிர்க்கட்சிகளின் கோஷம் வலுக்கத் தொடங்கியுள்ள நிலையில் மத்தியரசு என்ன செய்வதென்று தெரியாது கை பிசைவதைத்தான் காண முடிகின்றது.

ஏனெனில் நட்வர்சிங் பதவி விலக வேண்டும், அவர் மீது வழக்குத் தொடர வேண்டும்மென்று நிர்ப்பந்தம் தொடர்கின்றது. இதற்கு பதிலளித்துள்ள மத்தியரசு இவ்விவகாரத்தை தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும், அறிக்கையின் மூல ஆதாரம் குறித்து விசாரிக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை ஈராக்கிலுள்ள ஆவணங்கள் மற்றும் அதைச் சார்ந்த ஆவணங்கள் அடிப்படையிலேயே விசாரணை நடைபெற்றதாகவும், ஆவணங்களின் அடிப்படையில்தான் வோல்கர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் வோல்கர் கூறுகின்றார். அத்துடன் நட்வர்சிங் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் என்பதே தமக்கு இப்போது தான் தெரியவந்திருப்பதாகவும் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் ஒருவர் மீது குற்றஞ்சுமத்துவது பிழையான விடயம் எனவும் வோல்கர் குழு அறிக்கை பம்மாத்து என்றும் நட்வர்சிங் கூறியிருக்கின்றார்.

இருந்தபோதும் எதனையுமே எதிர்க் கட்சியான பாரதியஜனதா அசட்டை செய்தே வருகின்றது எனலாம். அந்தவகையில் தான் தமது முனைப்பான நடவடிக்கைகளை முடுக்கி வருகின்றது. இன்று தொடக்கம் 15.ஆம் திகதி வரை மாநில தலைநகரங்களில் நட்வர்சிங் பதவி விலகவேண்டுமென்பதை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவும் முடிவு செய்து விட்டது. அத்துடன் சனாதிபதி அப்துல் கலாமிடமும் இது குறித்து மனு சமர்ப்பிக்கவுள்ளதாக அறை கூவல் விடுத்திருக்கின்றது.

ஆரம்பத்தில் இடது சாரிகளும் நட்வர்சிங் விவகாரத்தில் எதிர்க்கட்சியின் வசம் சாய்வது போல்தான் நிலைமை இருந்தது. ஆனால் இடதுசாரிகள் நட்வர்சிங்கை தனியாக சந்தித்தமையினையடுத்து நிலைமை மாறிவிட்டது.

அந்தவகையில் நட்வர்சிங் பதவிவிலகத் தேவையில்லை. அவர் தவறு எதுவும் செய்துவிடவில்லை என்று கூறியிருக்கின்றது. அத்துடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் இடது சாரிகள் கூறியுள்ளன. அப்படியெனில் ஐ.நா.சபை மீது வழக்கு தொடுக்க வேண்டுமென்கிறதா...?

192 நாடுகளை அங்கத்துவமாகக் கொண்ட ஐ.நா.சபை மீது வழக்குத்தாக்கல் செய்வதோ... வோல்கர்மீது வழக்குத் தொடர்வதோ... எந்த அமெரிக்க நீதிமன்றமும் அதனை ஏற்றுக் கொள்ளாது அதனால் காங்கிரஸ்கட்சி யார்மீது எதுவும் செய்வதற்கில்லை என்றுதான் கூறவேண்டும்.

இதேவேளை நீதி விசாரணைதேவை என்று தெலுங்கு தேசம் கோரிக்கை விடுத்திருக்கின்றது. உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இதேபோல் நேர்மையான நீதி விசாரணை தேவையென சமாஜ்வாடி கோரிக்கை வைத்திருக்கிறது. நட்வர்சிங் பதவியில் தொடர்வதும் விலகுவதும் பிரதமர் மன்மோகன்சிங் கைகளில் விட்டுவிடுவதாக அக்கட்சி கூறியிருக்கின்றது.

இத்தகைய சங்கடமான சூழலிலும் கூட காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி மௌனம் காத்துவருவதாகப் பேசப்படுகின்றது. காங்கிரஸ் பெயரும் வோல்கர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதால் காங்கிரஸ் தலைவர் மௌன விரதம் காப்பதாக விமர்சனம் எழுந்திருக்கிறது.

இதேவேளை சதாம் ஹுசைனிடம்ஒப்பந்தம் செய்தமை முதல் கச்சா எண்ணெய் பெற்றுக் கொண்டமை வரை நட்வர்சிங் தொடர்புபட்டிருப்பதை வோல்கர் அறிக்கை படம்பிடித்துக் காட்டுகின்றது. அத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொண்ட மூன்றாம் நபர், நட்வர்சிங்கின் மகனின் நண்பர் என்றும், காங்கிரஸ், நட்வர்சிங் சார்பில் சதாமிற்கு 3.38 கோடி (7.5 இலட்சம் அமெரிக்கடொலர்கள்) ஜோர்டான் தேசிய வங்கியில் உள்ள சதாமின் அதிகாரிகள் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக வோல்கர் அறிக்கை கூறுகின்றது.

இதனை வைத்துப் பார்க்கையில் நட்வர்சிங் மீதான பிடி இறுகிவருகின்றது என்றுதான் கூறவேண்டும். அத்துடன் காங்கிரஸ்கட்சி மீதும் நம்பகத்தன்மை ஏற்படவும் இந்த வோல்கர் அறிக்கை சான்றாகக் கூடும்.

என்றாலும் எவ்விதமான ஆதாரங்களுமின்றி தனிப்பட்ட ஆவணங்கள் மூலம் குற்றச்சாட்டுக்களை அடுக்குவதும் பொருத்தமுடையதாகத் தெரியவரவில்லை. நட்வர்சிங் சந்தேகப்படுவது போல் வோல்கர் அறிக்கையின் பின்னே ஏதாவது அரசியல் இருக்கக் கூடும் என்பது கூட உண்மையாக இருக்கக் கூடும்...(?)

ஏனெனில் இந்தியா ஈராக்கிற்கு தனது படைகளை அனுப்பவில்லை என்று பலவிதமான சிக்கல்களை அப்போதே உருவாக்கி இருந்தது. அமெரிக்கா தான் நினைப்பதை சாதிக்க வேண்டும் எனும் வல்லாதிக்க நாடு. இந்தியா ஈராக்கிற்கு படையனுப்பாமைக்கு பழிதீர்க்கக் கூட இவ்வாறு வோல்கர் அறிக்கை என்று நாடகமாடக்கூடும் ஏனெனில் ஈராக்கில் பேரழிவு ஆயுதம் இருப்பதாகத் தான் அமெரிக்கா போர் தொடுத்தது ஆனால் இன்றுவரை ஈராக்கில் பேரழிவு ஆயுதம் கண்டுபிடிக்கப்படவில்லை அதுபோலவே இந்தியாவை பழிதீர்க்கக் கூட அமெரிக்கா, ஈராக்குடன் இந்தியாவை முடிச்சுபோட்டு கதையாக்கவும் கூடும்.(?)

எது எப்படியோ... வோல்கர் அறிக்கையின் பின்னே இருப்பது உண்மை யா? அல்லது அரசியலா? அதுவும் அமெரிக்க அரசியலா? என்பதை காலம் தான் பதிலளிக்கக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

-அ. கலைவாணி

□



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# காப்பாளர்களின் விஸ்பரூபம்





கிடைக்கமாட்டாரா ஒரு கில்கிறிஸ்ட் என் ஏங்கிய இந்திய ரசிகர்களுக்கு மகேந்திரா டோனி கிடைத்துவிட்டார் போன்று. துடுப் பாட்டத்திலும் விக்கெட் காப்பிலும் கலக்கி வருகிறார்.

இந்திய அணியின் சிறிலங்காவுக்கு எதிரான தொடர் வெற்றிக்கு இவரின் பங்கு முக்கியமானது. இது கிரிக்கெட் அரங்கில் விக்கெட் காப்பாளர்களின் விசுவரூபத்தை அழுத்தமாக உணர்த்தியுள்ளது.

பந்து வீச்சாளர்கள் துடுப்பாட்டத்தில் பிரகாசித்துவிட்டால் சகலதுறை வீரர்கள் என தூக்கிப் பிடிக்கும் நிலையில் இவர்களுக்கு போட்டியாக கில்கிறிஸ்ட் சங்கக்கார, பவுச்சர், கம்ரான் அக்மல் போன்ற விக்கெட்காப்பாளர்களுடன் இணைகிறார் இந்தியாவின் மகேந்திராடோனி. இந்தவகையில் இதனை முதலில் நிருபித்து காட்டியவர் அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் 33 வயதான இவர் இடைநிலை ஆட்டக்காரராக வாழ்க்கையைத் தொடக்கி தொடக்க ஆட்டக்காரர் என்ற அந்தஸ்துக்கு உயர்ந்தவர். முதல் 15 ஓவரில் விளாசித் தள்ளி புதிய புரட்சி செய்தவர். டெஸ்ட் ஒரு நாள் என எந்தப் போட்டியிலும் அதிரடியாக ஆடுவது இவரது பலம்.

தென்னாபிரிக்காவில்1997 இல் 20 வய்து இளம் வீரராக புகுந்த மார்க்பவுச்சர் விக்கெட் காப்பாளர் பதவியை தக்கவைக்க அவரது துடுப்பாட்டம் கைகொடுத்ததுடன் அணியின் துணைத் தலைவர் அந்தஸ்துக்கு உயர்வு பெறும் அளவுக்கு அவரை உயர்த்தியது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு 16 வயது வீரராக சிம்பாப்வே அணியில் நுழைந்த தைபு அவரின் துடுப்பாட்ட திறமை அணித் தலைவராக அவரைஉயர்த்தியதுடன் அபாரமாக விக்கெட் காப்புச் செய்யும் இவர் அணி இக்கட்டான நிலையில் இருக்கும் போதெல்லாம் அணியை மீட்கத் தவறு வதில்லை.

நியூசிலாந்து அணியில் பிரண்டன் மெக்லம் 24 வயது அதிரடி வீரரான இவர், அடுத்த தலைமுறை வீரராக போற்றப்படுகிறார். 2004 இல் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 195 ஓட்டம் குவித்தார். அதிலும் லோட்சில் 96 ஓட்டம் குவிக்க அணியில் நிரந்தர இடம் பிடித்தார்.

ஆஷஸ் ஹீரோவாக வலம் வரும் இங்கிலாந்தின் ஜெரண்ட் ஜோன்ஸ் புதிய ஹீரோவாக பிரகாசிக்கிறார். அலெக்ஸ்டுவர்ட் விட்டுச் சென்ற இடத்தை அழகாக பூர்த்தி செய்கிறார்.

இவர்களுக்கு இணையாக இந்திய துணைக்கண்டத்தில் சிறிலங்காவின் சங்கக்கார உச்சத்தில் இருக்கிறார். அணியின் அடுத்த தலைவராகவும் வர்ணிக்கப்படுகிறார். களுவிதாரண போன்ற அதிரடி விக்கெட் காப்பாளரை விரட்டி விட்டு மிகக் குறுகிய காலத்தில் மகத்தான வளர்ச்சிகண்டுள்ளார். 2002 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்டில் கலக்கிய அவர், சமீபத்திய ஜெய்ப்பூர் ஒரு நாள் போட்டியில் சதம் அடித்ததுடன் அதே வேகத்தில் விக்கெட் காப்பில் அனைவரையும் பிரமிக்க வைத்தார். இப் போட்டியில் சச்சின் கொடுத்தபிடியைப் பறந்து பிடித்து திறமையை வெளிப்படுத்தினார்.

பாகிஸ்தான் அணியில் மொயின்கானுக்கு பின் கம்ரான் அக்மல் நம்பிக்கை தருகிறார். முதல்தர போட்டியில் விக்கெட் காப்பாளராக 15 வயதில் அறிமுகமாகி தற்போது தேசிய அணியில் கலக்கிவருகிறார். இவர் இந்தியாவுக்கு எதிரான மொகாலி டெஸ்டில் ஓட்டங்கள் பெற்று அணியை தோல்வியில் இருந்து மீட்ட பெருமைமிக்கவர்.

இவர்கள் வரிசையில் புதிதாக சேர்ந்திருப்பவர் இந்தியாவின் மகேந்திரா டோனி. ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த இவர் விசாகப்பட்டினத்தில்148 ஓட்டங் களைப் பாகிஸ்தானுக்கு எதிராகக் குவித்தார். அடுத்து சிறிலங்காவுக்கு எதிராக 183 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்தார். இப்போட்டியில் அதிக ஓட்டம் குவித்த விக்கெட் காப் பாளர். அதிக ஆறு ஓட் டம் பெற்றவர்(பத்து) என்ற சாதனை யைப் படைத் துள்ள துடன் இந்திய அணியின் நட்சத் திரமாகவும் மிளிர்கின்றார். இவர் புதிய வரவு என்பதால் திறமையைத் தொடர்ந்தும் நிரூபிக்க நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

---

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பது பழமொழி. ஏறக்குறைய ஏழுவாரங்களுக்குமுன் சிம்பாப்வேயில் இருந்து இரண்டுபட்ட அணியோல நாடு திரும்பிய இந்திய அணி கடந்த பத்து நாட்களில் நான்குவெற்றிகளை தொடர்ந்து பெற்று ஒரு நாள் தொடரைக்கைப் பற்றியதுடன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கின்றது.

இந்திய அணியில் ஏற்படுத்தப்பட்ட சடுதியான மாற்றமே இந்தத்திடீர் எழுச்சிக்கு காரணம் என்பதை கூறித்தான் தெரிய வேண்டியதில்லை. இதனை அணிக்கு புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ராகுல் ராவிட்டும் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதற்கு இந்திய தேர்வுக்குழுவினரை பாராட்டும் அதேவேளை பயிற்சியாளர் சப்பலின் பணி பிரமிக்கும் ஒன்றாகவுள்ளது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பயிற்சியாளராகத் தெரிவான சப்பல் வீழ்ந்து கிடந்த இந்திய அணியை தூக்கி நிறுத்துவார் என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருந்தார். ஆனால் அவருக்கு அரம்பத்தில் கிடைத்ததோ தோல்வி முகம். இந்த நிலையில் கிரிக்கெட் தரவரிசையில் பின்னிலையில் இருக்கும் சிம்பாப்வேக்கு எதிரான தொடரை வெல்ல காரணமாக இருந்தாராயினும் அவமானத்துடனேயே நாடு திரும்பினார். (கப்டன் கங்குலி சப்பல் விவகாரம்) இந்த நிலையில் சப்பல் இந்திய அணிக்கு தேவைதானா? என்ற கேள்வியை ஏற்படுத்தியிருந்தது.

இத்தனைக்கும் மத்தியில் பொறுமைகாத்து வந்த சப்பல் அணியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தீவிரமாக ஆலோசித்ததுடன் தேர்வுக்குழுவிடம் இது தொடரில் கருத்துக்களையும் முன்வைத்தார். இதற்கு அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் அனுமதி கிடைத்ததால் அணியில் சடுதியான புரட்சியையே ஏற்படுத்திவிட்டார் சப்பல்.

இந்திய அணி இனி அடிவாங்கும் அணியல்ல அடிக்கும் அணி என்பதை தனது மதிநுட்பம் வாய்ந்த திறனாணய்வு மூலம் நிருபித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் உலகச் சம்பியன் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தநிலையில் இருந்த சிறிலங்கா அணிக்கு கொடுக்கப்பட்ட தொடர் தோல்வி இந்தியாவுக்குச் கிடைத்த வெற்றி என்பதற்கு அப்பால் சப்பலின் தெரிவுக்குக் கிடைத்த வெற்றியே.

இந்திய அணியை இளைஞர் படையாக உருவாக்கியுள்ள சப்பல் அவ் வணி யின் எழுச்சியால் எதிர்காலத்தில் உலகின் சிறந்த பயிற்சியாளர் என்ற பெயரை பெற்றாலும் ஆச்சரியப் படுவதற் கில்லை.

இ. சியான்



## அடிவாங்கும் அணியல்ல...?...?

---

## இவரும் ஜாம்பவானே

எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமளிக்கும் போது அரசியல்வாதிகளோ விளையாட்டு வீரர்களோ திடீர் முடிவை எடுக்க வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாவர். இதனை மெய்ப்பிக்கும் படியாக அயர்லாந்து கால்பந்தாட்ட அணித் தலைவர் ரோய்கீன் திடீரென முடிவு எடுத்துசர்வதேச கால்பந்தாட்டத்தில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற 2006 ஆம் ஆண்டின் உலகக் கிண்ணப்போட்டிகளுக்கான தகுதிப்போட்டியில் அயர்லாந்து தகுதி பெறத்தவறியமையே இவரது ஏமாற்றத்துக்கும் திடீர் முடிவுக்கும் காரணமாகும்.

கடந்தசெப்ரெம்பரில் ஐரோப்பிய குழுவில் போட்டியிட்ட எட்டு நாடுகளில் அயர்லாந்து நான்காவது இடத்தையே பெற்றது.அத்துடன் சுவிஸ்சர்லாந்துடனான போட்டியில் கோல் ஏதும் அடிக்காத நிலையில்போட்டி சமநிலையில் முடிந்ததுடன் கீன் காயத்துக்கும் உள்ளானார். அதன் காரணமாக ஏனைய போட்டிகளில் அவர் பங்குபற்ற முடியாது விட்டமை பிரபல வீரரான அவரின் திறமைக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

கீன் ஏற்கனவே அயர்லாந்து தகுதி பெறாமல் விட்டாலும் தகுதிபெற்றாலும் 2006 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் பின் ஓய்வுபெறப் போவதாக கூறிவந்துள்ளார். இவர் 56 வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்துள் ளார் எனினும் மஞ் செஸ்டர் அணியின் முகாமையாளருடன் ஏற் பட்ட கருத்து மோதல் காரணமாக 2002 ஆம் ஆண்டு நடை பெற்ற உலகக் கிண்ண போட்டியில் இவர் பங் கெடுக்கவில்லை எனி னும் தற்போதைய முகாமையாளரான பிரைன் கெர் உடன் தொடர்பு கொண்டு அணிக்காக ஆடிவந்தார். எனினும்



அண்மைக்காலமாக தனக்கும் பிரைனுக்கும்இடையில் கருத்து முரண்பாடு காணப்படுவதாக ஊடகங்கள் கூறுவதை அவர் நிராகரித்துள்ளார்.கீன் 1991 ஆம் ஆண்டு சிலியுடனான போட்டியில் முதல் வெற்றியைப் பெற்றதுடன் 1994ஆம் ஆண்டில் உலகக் கிண்ண இறுதிப் போட்டித் தொடரில் ஒன்பது கோல்களை அடித்தார்.1993 இல் நொட்டிக்காம் பொரஸ்ட் அணியிலிருந்து 3.75 மில்லியன் பவுனுக்கு மஞ்செஸ்டர் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட இவர் அவ் அணிக்காக பாரிய வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இறுதியில் 2006 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் பிரகாசிக்க முடியாமலேயே அவர் ஓய்வை அறிவித்தமை கால்பந்தாட்ட ரசிகர்களுக்கும் பாரிய ஏமாற்றமாகும்.

வடிவேல்

# ஐ.தே.கவுடன் இரகசிய ஒப்பந்தம் இல்லை

## இ.தொ.கா, மு.கா வலியுறுத்து

*சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் ஆதரவு தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியுடன் தமதுகட்சிகள் எதுவித இரகசிய ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளவில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தெரிவித்துள்ளன.*

முஸ்லிம் காங்கிரசின் பொதுச்செயலாளர் ஹசன் அலிமற்றும் தொழிலாளர் காங்கிரசின் பிரதித் தலைவர் ஆர் யோகராஜன் ஆகியோர் இந்தமறுப்பை வெளியிட்டுள்ளனர்.

ஆர்.யோகராஜன் கூறியுள்ளதாவது;

சிறிலங்காவில் பணக்கார கட்சி ஜே.வி.பி.தான். வெளி நாடுகளின் கம்யூனிச அமைப்புக்களிடமிருந்து அக்கட்சிக்குப் பணம் வருகிறது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியை அது வெளிநாட்டு சக்திகளின் கட்சியாக சித்திரிக்கிறது.ஜே.வி.பியினர் முதலில் தம்மைப் பார்த்துக்கொள்ள வேண்டும். மலையக மக்களின் நலனுக்காகத்தான் ஐக்கிய தேசியக்கட்சியுடன் நிபந்தனையுடனான ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளனரே தவிர ஜே.வி.பி கூறுவது போல் தனி அலகை நாம் கோரவில்லை.

இனப்பிரச் சினைக்கு இந்திய கூட்டாட்சி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காண வேண்டும் என்பதுதான் இ.தொ. க. வின் நிலை என்றார் யோகராஜன்.

ஹசன் அலி கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சியுடனான ஒப்பந்த விபரங்களை நாம் புத்தக வடிவில் வெளியிட்டுள்ளோம். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவைகளே ஒப்பந்தத்தில் உள்ளவை என்றார்.

# சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை அகற்ற சனாதிபதி சந்திரிகா ஆதரவாம்

(கண்டி)

சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை அகற்ற நாம் இன்னமும் ஆதரவளிக்கிறோம் என இன்னமும் பத்து நாட்கள் மட்டுமே நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பேராதனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியின் 75 விதமான வாக்குகள் இனப்பிரச்சினைக்கு அமைதி முயற்சிகள் மூலமான தீர்வு காண்பதற்காகவே கிடைக்கும்.

ஹிட்லரைப்போல் இந்த நாட்டில் உள்ள தீவிரவாதிகள் நாட்டை அழித்துவிடுவார்கள். தீவிரவாதிகளின் தலையீடு இல்லாமல் அமைதி முயற்சிகள் மூலமே இனப்பிரச் சினைக்குத்தீர்வுகாண வேண்டும். எதிர்க்கட்சித் தலைவராக உள்ளவர் நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதியாக ஆசைப்படுகிறார். நாம் இன்னமும் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை அகற்ற ஆதரவளிக்கிறோம். 1995 ஆம் ஆண்டு ஓகஸ்டில் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பங்குபெரும்பான்மை இல்லாத காரணத்தால் எம்மால் அதைச் செய்ய முடியவில்லை.

கீழ்த்தரமாக எழுதுகிற ஊடகத்தாரை சிறையில் தள்ளியிருப்போம். அல்லது சிலர் செய்வதைப் போல கொலை செய்திருக்க வேண்டும். ஆனால் நாம் அதை எப்போதும் செய்யப்போவதில்லை. சுகாதார சேவையில் புதிய செயற்றிட்டங்களைச் செயற்படுத்த சுகாதார சேவையாளர்களின் தொழிற்சங்கங்கள் தடையாக உள்ளன என்றார் சந்திரிகா.

# திருமலையில் இராணுவ உயரதிகாரியை ஐஸ்மஞ்சு உளவு பார்த்தாராம்

சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரியான மீடின் கொலையின் பிரதான சந்தேக நபரான ஐஸ்மஞ்சு ஒரு மாதத்திற்கு முன்னர் திருகோணமலையில் இராணுவ அதிகாரியொருவரின் நடமாட்டங்களை உளவுபார்த்ததாக படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.பாடசாலை மாணவர்களுக்கு மேற்படி அதிகாரி உரை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் முச்சக்கர வண்டியில் அங்கு வந்த ஐஸ்மஞ்சு அவரை உளவுபார்த்திருக்கிறார்.

இதனை அவதானித்த இராணுவ அதிகாரியின் பாதுகாவலர்கள் ஐஸ்மஞ்சுவை பின்தொடர்ந்த போது அவர் தப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில காலங்களுக்கு முன்னர் கொட்டாவைப் பகுதிக்கும் ஐஸ்மஞ்சு வந்திருப்பதாகத்தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

# வரவு-செலவுத்திட்ட சமர்ப்பிப்பின் போது விசேட அமைச்சரவை கூட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் தினமான இன்று விசேட அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. இதன்போதே அமைச்சர்களுக்கு வரவு-செலவுத்திட்டம் தொடர்பான விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டாவது வரவு - செலவுத்திட்டம் இன்று பிற்பகல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாகவே சனாதிபதியின் தலைமையில் விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது

இதேவேளை இந்த வரவு_செலவுத்திட்டத்தில் பிரதமர் மகிந்தவின் சிந்தனையின் அம்சங்கள் இடம்பெறும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதும் தற்சமயம் அதற்கான வாய்ப்புகள் இல்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (32)

# முஸ்லிம்களின் உரிமையைப் பேரம்பேசிப்பெற சனாதிபதித் தேர்தல் நல்ல வாய்ப்பு

*மு. கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு*

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் முஸ்லிம் மக்களுடைய உரிமைகளைப்பேரம் பேசிப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளித்த முக்கியமான தேர்தல் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் பொழுதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். முஸ்லிம் காங்கிரஸ்இந்த சனாதிபதித் தேர்தல் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அடிபணிய வைத்துள்ளதாகத் தெரிவித்த அவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை பலவீனப்படுத்த முடியாத வகையிலான உறுதியான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதாகவும் கூறினார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதரவு இல்லாமல் எவராலும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்றும் அவர் நேற்று நடந்தநிகழ்வில் தெரிவித்தார். (32)


## தமிழீழப் போக்குவரவுக் கழகம் நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

மழைகாரணமாக 05.11.2005 ஆம் நாள் நடைபெற்ற நேர்காணலிற்கு வருகை தராதவர்கள் 12.11.2005 ஆம் நாள் சனி காலை 09.00 மணிக்கு விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனைக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி,ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-13310)


# பூசா இராணுவ முகாமை நோட்டமிட்டனராம் தமிழ்ப்பெண்ணும் சிங்களவரும் படையினரால் கைது

காலி பூசா இராணுவ முகாமை நோட்டமிட்டதாகக் கூறி ஹற்றனைச் சேர்ந்த 37 வயதுடைய தமிழ் பெண் ஒருவரும், நீர் கொழும்பைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரும் சனிக்கிழமை காலை ரத்கம பகுதி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் முச்சக்கர வண்டியில் இருந்து இராணுவ முகாமை அவதானித்துக் கொண்டிருந்ததாகவும் அதனை முகாமிலிருந்து அவதானித்த இராணுவத்தினர் விசாரணைக்கு உட்படுத்தி ரத்கம பொலிசாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிய வருகின்றது.அவர்கள் இருவரும் திருமணம் செய்யும் நோக்கத்தில் காலிப் பகுதிக்கு வந்ததாகவும், சற்று ஓய்வு எடுப்பதற்காக முகாமுள்ள பகுதியில் முச்சக்கர வண்டியை நிறுத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இருந்தபோதும் இவர்களிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் தொடர்பு இருப்பதாக சிறிலங்கா பொலிசாரால் குற்றம் சுமத்தப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

**வவுனியா மாவட்டம்**

வ/வ/616 திரு.வேலுப்பிள்ளை ஐயம்பிள்ளை.
வ/வ/620 திரு.சின்னத்துரை சிவநாதன்.
வ/வ/ 623 திருமதி.புனிதவதி தர்மலிங்கம்.
வ/வ/ 625 திரு.ஆரியர் பாக்கியநாதன்.
வ/வ/626 திரு.கனகசபை சிவலிங்கம்.
வ/வ/628 திருநாகலிங்கம் யோகராசா.
வ/வ/629 திரு.சுவாமிநாதன் இராசநாயகம்.
வ/வ/630 திரு.சோமசுந்தரம் சிவராசா.
வ/வ/631 திரு.சின்னத்தம்பி குணநாயகம்.
வ/வ/632 திரு.சுப்பையா சுப்பிரமணியம்.
வ/வ/ 633 திரு.நெல்லியர் சிவராசா.
வ/வ/636 திருமதி.பத்மினி ரமணி.
வ/வ/637 திரு.சபாபதிப்பிள்ளை செல்லத்துரை.
வ/வ/640 திரு. காங்கேசு முத்துராசா.
வ/வ/641 திரு.பெருமாள் பெரியசாமி.
வ/வ/645 திரு.சிவஞானம் சோதிலிங்கம்.
வ/வ/647 திரு.இராசையா செல்வரத்தினம்.
வ/வ/648 திரு.பொன்னம்பலம் பிள்ளையினார்.
வ/வ/650 திரு.மகாலிங்கம் ரவிச்சந்திரன்.
வ/வ/653 திரு.செல்லத்துரை செந்தில்நாதன்.
வ/வ/654 திரு.செல்லத்துரை சிவபாதம்.
வ/வ/656 திரு.தம்பாப்பிள்ளை நடராசா.
வ/வ/657 திரு. கா. தேவராசன்.
வ/வ/659 திரு.மயில்வாகனம் அமிர்தலிங்கம்.
வ/வ/660 திரு.இரத்தினசபாபதி விக்னேஸ்வரன்.
வ/வ/661 திரு.காசிப்பிள்ளை செல்வராசா.
வ/வ/663 திரு.கதிர்காமு சேனாதிராசா.
வ/வ/666 திரு.சிதம்பரப்பிள்ளை தியாகராசா.
வ/வ/667 திருசின்னையா சிவசேகரம்.
வ/வ/670 திருமதி.மல்லிகாதேவி சிவசுப்பிரமணியம்.
வ/வ/ 673 திருமதி.மகேஸ்வரி பாக்கியநாதன்.
வ/வ/679 திருமதி.நித்தியாதேவி தெய்வநாயகம்.
வ/வ/682 திரு.வீரசிங்கம் சிவபாதம்.
வ/வ/683 திரு.தர்மலிங்கம் சிவபாலன்.
வ/வ/684 திரு.கந்தையா புஷ்பேந்திரன்
வ/வ/687 திரு.அருணம்பலம் சண்முகநாதன்.
வ/வ/692 திரு.மயில்வாகனம் செல்வநாயகம்.
வ/வ/694 திரு.நல்லசேகரம் இராசகுலசிங்கம்.
வ/வ/695 திரு.நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்.
வ/வ/698 செல்வன்.முருகேச நகுலேஸ்வரன்.
வ/வ/700 திரு.மயில்வாகனம் உதயகுமார்.
வ/வ/701 திரு.வேலுப்பிள்ளை தங்கராசா.
வ/வ/702 திரு.குணசேகரி ரகுநாதன்.
வ/வ/706 திரு.கணபதிப்பிள்ளை பொன்னையா.
வ/வ/709 திரு.வேலுப்பிள்ளைகுருக்கள் யோகராச குருக்கள்.
வ/வ/711 திரு.முத்தையா பாக்கியநாதன்.
வ/வ/714 திருமதி.தவமணி பரமேஸ்வரன்.
வ/வ/715 திரு.காசிப்பிள்ளை தேவராசா.
வ/வ/716 திரு.வீரவாகு தர்மலிங்கம்.
வ/வ/717 திரு.தர்மலிங்கம் முத்துலிங்கம்.
வ/வ/720 திரு.அண்ணாமலை சிவகுரு.
வ/வ/724 திரு.ஐயம்பிள்ளை சிவராசா.
வ/வ/726 திரு.சுப்பையா நடராசா.
வ/வ/727 திரு.விநாயகமூர்த்தி கணேசலிங்கம்.

(தொடரும்)

# 1,500 வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது

# நாகையில் மழைக்கு இதுவரை 7பேர் பலி

(நாகப்பட்டினம்)

தமிழகம், நாகைமாவட்டத்தில் இரு தினங்களாக புலத்தமழை பெய்துவருகிறது. இதன் காரணமாக ஏழு பேர் பலியாகியுள்ளனர். வீடுகளை தண்ணீர் சூழ்ந்துள்ளது. நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.



நாகைமாவட்டத்தில் பரவலாக 15 செண்டிமீற்றர் மழை பெய்துள்ளது. இதனால் ஐந்து ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற் பயிர்கள் வெள்ள நீரில் மூழ்கிக்கிடக்கின்றன.

சம்பா மற்றும் தாளடி நெற் பயிர்களுக்கு மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்டபாதிப்புகள் குறித்து வெள்ள நீர் முழுமையாக வடிந்த பின்னரே வேளாண்மைத் துறையினரால் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

இப்பகுதிகளில் 1,500 வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்தப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

நாகைமாவட்டத்தில் மழைவெள்ளத்துக்கு இதுவரை ஏழு பேர் பலியாகியுள்ளனர். மழைகாரணமாக நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளுக்கும் நேற்று விடுமுறை விடப்பட்டுள்ளது.

# காஷ்மீரில் ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல்

# ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாதியும் கைது

(ஜம்மு)

காஷ்மீரில் இந்தியப் படையினர் நடத்திய தேடுதல் வேட் டையில் ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவர் கைது செய்யப்பட்டார். மற் றொரு சம்பவத்தில் மறைத்து வைத் திருந்த ஏராளமான வெடிமருந்து களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீர் தோடா மாவட்டம் முகார்காட் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து பாதுகாப்புப் படையினர் அப்பகுதியில்தீவிரதேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய குலாம் மொய்தீன்லோன் என்ற தீவிரவாதி கைது செய்யப்பட்டார். இந்தத் தீவிரவாதி 2002 ஆம் ஆண்டிலிருந்து தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் கைதுசெய்யப்பட்ட தீவிரவாதி அடுத்தகட்ட விசாரணைக்காக பொலிசார் வசம் ஒப்படைக்கப்பட்டார்.

தோடாமாவட்ட தாகியாவில் உள்ளபனிகால் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய மற்றொரு தேடுதல் வேட்டையில் பொலித்தீன் உறையில் சுற்றப்பட்டு பாறைகளுக்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஒரு பிஸ்டல், 43 நிரப்பப்பட்ட பொதிகளில் ஏ.கே.ரக துப்பாக்கி தோட்டாக்கள், இரண்டு பைனாகுலர்கள், இரண்டு கையெறி குண்டுகள் மற்றும் மருந்துப் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது பறிமுதல் செய்யப்பட்டது.

# கூட்டணி இல்லை என்கிறார்

# நடிகர் விஜயகாந்த்

(மதுரை)

எந்தக் கட்சியுடனும் நான் கூட்டணி சேரமாட்டேன் என நடிகர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார். நடிகர்விஜயகாந்த் சமீபத்தில் தேசிய முன்னேற்ற முற்போக்குக் கழகம் என்ற கட்சியை தொடங்கினார். அவர் மதுரை தாஜ்விடுதியில் கட்சி நிர்வாகிகளுடன் கடந்த மூன்று நாட்களாக ஆலோசனை நடத்தினார்.

பின்னர் நேற்று முன்தினம் மாலை நிருபர்களிடம் அவர்கூறியதாவது;

அனைத்து மாவட்டங்களிலும் ஒன்றியம், நகரம், புறநகர் நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. மதுரை, விருதுநகர்,கோவை,ஊட்டி தூத்துக்குடி, நெல்லை ஆகிய அறு மாவட்டங்களுக்கும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டில்லியில் கட்சியை பதிவு செய்வதற்கானஇலக்கம் இன்னும் வரவில்லை வந்தவுடன் பொறுமையாக நிர்வாகிகள் நியமிக்கப் படுவார்கள் டிசம்பரில் அனைத்து கிராமங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்ய உள்ளேன்.

நான் எந்தக் கட்சியிலும் கூட்டணி சேரமாட்டேன் என் கட்சி தனிக்கட்சிதான். வரும் தேர்தலில் தனியாகத்தான் போட்டியிடப் போகிறேன். சினிமாவிலும் 150 ஆவது படம் நடிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அதற்கு வாய்ப்பு வந்ததும் நடிக்கவுள்ளேன்.

நடிகர்களிடையே பல பிரச்சினைகள் உள்ளன. இதை தீர்க்க நடிகர் சங்கத்தில் நிர்வாகிகள் உள்ளனர். அவர்கள் என்னுடன் ஆலோசனை செய்து உடனுக்குடன் தீர்த்து வைப்பார்கள் என்றார்.



கர்நாடக மாநில பெங்களூரில் கடந்த சனிக்கிழமை நடந்த விழாவில் பின்னணிப்பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்கு கோவிந்த்லட்சுமி புரஸ்கார் விருதைவழங்கிக் கௌரவிக்கின்றார். கர்நாடக மாநில ஆளுனர் சதுர்வேதி.

# ஜம்முவில் ஆசாத்துக்கு வரவேற்பு

(ஜம்மு)



காஷ்மீரில் புதியமுதல்வராக பதவியேற்றுள்ள குலாம் நபி ஆசாத்துக்கு ஜம்முவில் காங். தொண்டர்கள் பிரமாண்டமான வரவேற்பு அளித்தனர்.

காஷ்மீர் சட்டசபை குளிர்கால கூட்டத்தொடர்ஜம்முவில் நடக்கவுள்ளது. இதில் பங்கேற்க குலாம் நபி ஆசாத் விமானம் மூலம் ஜம்மு சென்றார். முதல்வராக பதவியேற்றபின் ஜம்முவுக்கு முதன் முறையாக சென்ற ஆசாத்துக்கு விமான நிலையத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் பிரமாண்டமான வரவேற்பு அளித்தனர்.

# வோல்கர் அறிக்கை தொடர்பாக

# நட்வர்சிங் பிரதமரைச் சந்தித்தார்

(புதுடில்லி)

வோல்கர் விசாரணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக மத்திய அமைச்சர் நட்வர்சிங் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார். சுமார் ஒன்றரை மணிநேரம் அந்த சந்திப்பு நடந்தது.

ஈராக் நாட்டுக்கான ஐ.நா. திட்டத்தில் ஊழல் நடந்ததாக வோல்கர் குழு அறிக்கை சமர்ப்பித்தது. ஊழலில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கே.நட்வர்சிங் மற்றும் காங்.கட்சிக்கு தொடர்பு இருப்பதாக வோல்கர் அறிக்கை கூறியிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது.

இது பற்றி ஆராய மன்மோகன் சிங் டெல்லியில் நேற்றுமுன்தினம் சோனியா மற்றும் மத்திய அமைச்சர்களுடன் தீவிர ஆலோசனை நடத்தினார் உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, சட்ட அமைச்சர் ஹான்ஸ்ராஜ் பரத்வாஜ், நிதி அமைச்சர் ப.சிதம்பரம், மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அர்ஜின்சிங், சோனியாவின் அரசியல் செயலர் அகமது படேல், பிரதமரின் அரசியல் ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோர் அந்த உயர் மட்ட கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஒரு மணிநேரத்துக்கும் மேல் கூட்டம் நடந்தது.

அந்தக் கூட்டத்துக்குப் பின் மன்மோகன்சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்குக்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று நட்வர்சிங் மன்மோகன்சிங்கை பிரதமர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார். 90 நிமிடநேரம் அந்தச் சந்திப்பு நடந்தது.

சந்திப்புக்குப் பின் நட்வர் சிங் நிருபர்களிடம் பேசினார். வோல்கர் அறிக்கை பற்றி பிரதமருடன் நான் பேசினேன். வோல்கர் அறிக்கையை பற்றி மட்டுமல்லாமல் சர்வதேச பிரச்சினைகள் பற்றியும் பிரதமரிடம் விவாதித்தேன் எனத் தெரிவித்தார். பிரதமரிடம் பேசிய விஷயங்கள் குறித்து விவரமாக கூற அவர் மறுத்துவிட்டார்.




டில்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அவருடைய வீட்டில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் நேற்று முன் தினம் சந்தித்தார். சந்திப்புக்குப் பின் வீட்டுக்கு வெளியே நிருபர்களுக்கு பேட்டி அளிக்கிறார் நட்வர் சிங்.


## உங்களை உலகறிய! நீங்கள் தயாரா?

படப்பிடிப்புத்துறையில் உங்களையும் ஒரு சாதனையாளராக்க

இதோ வெளிவந்து விட்டது

Camera

உலகிலேயே முதன்முறையாக தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும்

படப்பிடிப்புத்துறைக்கான மாதாந்த சஞ்சிகை

கல்வி, தொழில்இவை எமது வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவை ஆனால் பலருக்கு சிறந்த கல்வியையும் அதற்கேற்ற தொழிலையும் தீர்மானிப்பதில் குழப்பங்கள் இருக்கும் அதனால் அவர்கள் ஏமாந்து போகக்கூடிய வாய்ப்புகள் அதிகம். ஆகவே அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி தேவைப்படுகின்றது.

அத்தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் புகைப்படக்கலையை கற்றுக்கொடுக்கவும் அதனை ஒரு சுயதொழிலாக கொண்டு நடாத்துவது எப்படி என்பது தொடர்பாகவும் பூரண விளக்கங்களுடன் Camera Technology எனும் மாதாந்த சஞ்சிகை இப்பொழுது பரபரப்பான விற்பனையில்.

தமிழனுக்கும் படப்பிடிப்புக் கலையின் சரித்திரத்தில் ஒரு இடத்தைவகிக்கக் கூடியவாய்ப்பை பெற்றுத்தந்துள்ள உலகின் முதலாவது தமிழ்மொழி மூலமான மாதாந்த கமரா சஞ்சிகை இது.

உங்களை ஒரு முழுமையான படப்பிடிப்புக் கலைஞனாக மாற்றக் கூடிய Camera Technology சஞ்சிகையை நீங்களும் வாங்கத் தவறாதீர்கள்

2ஆவது வெளியீட்டுடன்இலவசமாக வழங்கப்பட்டுள்ள 11,12,13ஆம் திகதிகளில் (BMICH) இல் நடைபெறவிருக்கும் சர்வதேச புகைப்பட மற்றும் விளம்பரக் கண்காட்சிக்கான நுழைவுச்சீட்டானது 5 நபர்கள் வரை அநுமதியுடையது.

அனைத்து அறிவமுது புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

அனைத்துகளர் லாப்புகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

CAMERA TECHNOLOGY (PVT) LTD
NO.641/1,Bonjean ROad,kotahena,
Colombo-13

(சி.13314) Tel:-4617373 Fax:-2387912



தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நியூசிலாந்து தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்தாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் தென்னா பிரிக்கா ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

# நியூசிலாந்துக்கு தொடரும் தோல்வி; தென்னாபிரிக்கா வெற்றிப்பயணம்

ஏற்கனவே தொடர்ந்து மூன்று போட்டியிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியமையினால் நான்காவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது தெரிந்ததே.

செஞ்சூரியனில் நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் நியூசிலாந்து அணி முதல்துடுப்பெடுத்தாடி 215 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பிளமிங் ஓட்டம் பெறாமல் இரண்டாவது பந்தில் ஆட்டமிழக்க லோவின்சன்ட் ஆஸ்லே இணை ஓட்ட எண்ணிக்கையை 75 வரை கொண்டு சென்றது. லோவிண்ட்சட் எட்டு பவுண்டரிகள், இரு சிக்சர்கள் உட்பட 66 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் அன்று ஹோலிடம் அவரின் விக்கெட் வீழ்ந்ததை அடுத்து நியூசிலாந்து அணி யின் ஓட்ட வேகம் சரிந்தது.

பந்து வீச்சில் தென்னாபிரிக்காவின் என்ரு ஹோல் 23 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக்கைப்பற்றினார்.

பின்னர் 216 என்ற வெற்றியிலக்கு நோக்கி தென்னாபிரிக்கா ஆட்டத்தைத் தொடர்ந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் டக்வேத் லூயிஸ் முறையில் 30 ஓவரில் 140 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்று நிர்ணயிக்கப்பட்டது.

அதன்படி ஆரம்பவீரராக களமிறங்கிய அணித்தலைவர் ஸ்மித் நல்ல அடித்தளத்தை யிட்டதால் அணி 28.1 ஓவரிலேயே ஐந்து விக்கெட்டுக்களையிழந்து வெற்றியிலக்கை எட்டியது. ஸ்மித் 65 பந்துகளில் 13 நான்கு ஓட்டம் உட்பட 66 ஓட்டங்களைப் பெற்றார். பவுச்சர்21 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.



# இந்தியாவுக்கு எதிரான தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

தென்னாபிரிக்க அணி இம் மாதம் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து ஐந்து ஒரு நாள் போட்டிகளில் இந்திய அணியுடன் விளையாடுகிறது. போட்டி வரும் 16 ஆம் திகதி தொடங்குகிறது.

இதற்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணி விபரம்: ஸ்மித் (தலைவர்), ஜோகன் போதா, பவுச்சர், வில்லியர்ஸ், ஜாக்ஸ்கலிஸ், ஜஸ்டின் கெம்ப், லாங் வெல்ட், அல்பி மார்கெல், அந்திரே நெல், நிதினி, ஒன்டாங், ராபின் பீட்டர்சன், பொல்லக், ஆஸ் வெல் பிரின்ஸ்

விளையாட்டு

# தற்போது ஓய்வென்ற பேச்சுக்கு இடமில்லை நிறையவே சாதிக்க இருக்கிறது-சச்சின்



"கிரிக்கெட்டில் சாதிக்க இன்னும் நிறைய இருக்கிறது. இப்போதைக்கு ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை." என கூறியிருக்கிறார் சச்சின் டெண்டுல்கர்.

சுமார் 16 ஆண்டுகளாக இந்திய அணிக்காக விளையாடி நட்சத்திர துடுப்பாட்டவீரர்சச்சின் பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரர் 'டென்னிஸ் எல்போ' காயம் குணமாகி ஆறு மாதங்களுக்குப் பின் களமிறங்கியுள்ள இவர், இலங்கைக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடி வருகிறார். ஐந்தாவது போட்டிக்காக அகமதாபாத் வந்திருந்த இவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

கிரிக்கெட்டில் படைக்க வேண்டிய சாதனைகள் நிறைய இருக்கின்றன. அதற்கு முன் ஓய்வுபெறமாட்டேன். நமது அணி தற்போது மிகச்சிறப்பான நிலையில் இருக்கிறது. இந்த வெற்றி நடைதொடரும் என நம்புகிறேன். இதற்கு ரசிகர்களின் ஆதரவும் தேவை சீனியர் வீரர் என்ற முறையில் இளம் வீரர்களிடம் கிரிக்கெட் விடயங்களை பகிர்ந்து கொள்வேன். அவர்களது குறைகளை நிவர்த்தி செய்ய உதவுவேன். விளையாட்டைப் பொறுத்தவரையில் எல்லோருமே மாணவர்கள் தான்.இதில் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. ஆனால் நாம்தான் மாஸ்டர் என்ற நினைப்பு வந்து விட்டால் அவ்வளவுதான் நமது கற்கும் திறன் அப்படியே நின்று விடும். திறமையிலும் அதற்குமேல் வளர்ச்சி இருக்காது இவ்வாறு சச்சின் கூறினார்.

# கடைசி இரு போட்டிகளிலும் கங்குலிக்கு வாய்ப்பில்லை மீண்டும் அணியில் கைப்;ராவ்,யாதவ் நீக்கம்



இந்திய-இலங்கை இடையே நடந்துவரும் ஏழு ஒரு நாள் போட்டித் தொடரில்இதுவரை ஐந்து போட்டிகள் முடிந்துள்ளன. அடுத்த இரண்டு போட்டிகள் குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட், பரோடா ஆகிய இடங்களில் நடக்கவிருக்கிறது.

இந்த இரண்டு போட்டிக்கான வீரர்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் முன்னாள் தலைவர் கங்குலி சேர்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

இந்தத்தொடரில் முதல் இரண்டு போட்டிக்கு முதலில் வீரர்கள் அறிவிக்கப்பட்டனர். அப்போது கங்குலிக்கு காயம் ஏற்பட்டு இருந்ததால் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.அடுத்த மூன்று போட்டிகளுக்கு வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அப்போது கங்குலி காயம் குணமடைந்திருந்த போதிலும் சேர்க்க மறுத்துவிட்டனர்.

கடைசி இரண்டு போட்டிகளிலாவது இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதிலும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

காயம்காரணமாக விளையாடாமல் இருந்த முகமது கயூப் குணமடைந்துவிட்டதால் அவர்அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். அதேபோல் புதுமுக வீரர் விக்ரம் கில் முதல் முதலாக சேர்க்கப்பட்டுள்ளார்.இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே அணியில் இருந்த வேனுகோபால் ராவ், ஜே.பி.யாதவ்ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

# எதையும் சந்திக்கத் தயார் டன்கன் பிளட்சர் சவால்



பாகிஸ்தான் தொடரில் சுழல், வேகப்பந்து வீச்சை சமாளிக்கத் தயாராக இருப்பதாக இங்கிலாந்து பயிற்சியாளர் டன்கன் பிளட்சர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சென்றுள்ள இங்கிலாந்து அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் வரும் 12 இல் முல்தானில் தொடங்குகிறது. சமீபத்திய அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை வென்ற குஷியில் இங்கிலாந்து காணப்படுகிறது. பாகிஸ்தானோ சொந்த மண்ணில் களமிறங்குவதால் மிகுந்த தன்னம்பிக்கையுடன் உள்ளது. இம்முறை டேனிஷ் கனீரியா, அர்ஷத்கான், சாகித் அப்ரிதி சோயப்மாலிக், முஷ்டாக் அகமது என ஐந்து சுழற்பந்துவீச்சாளர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளதால் சுழலில் சாதிக்க காத்திருக்கிறது.

இது குறித்து இங்கிலாந்து பயிற்சியாளர் டன்கன் பிளட்சர் கூறுகையில் சுழற்பந்து வீச்சால் இங்கிலாந்தை அசைக்கமுடியாது.ஏனென்றால் எங்கள் வீரர்கள் அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்னை சமாளித்துப் பழக்கப்பட்டவர்கள். இங்கிலாந்து அணியிலும் ஆஷ்லி கைல்ஸ்ச ஷோன் உடால், அலெக்ஸ்லோடன் போன்ற சுழல்வீரர்கள் உள்ளனர். எனவே பாகிஸ்தான் ஆடுகளங்கள் ஒருவேளை சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டாலும் கவலை இல்லை வேகத்துக்கு ஸ்டீவ்ஹார்மிசன், மாத்யூ ஹோகார்ட், ஜேம்ஸ் ஆண்டர்சன் இருக்கிறார்கள் ஆக எத்தகைய சவாலையும் சந்திக்க இங்கிலாந்து தயாராக இருக்கிறது என்றார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் நேற்று முன்தினம் ஏ-1 கிராண்ட்பிரிக்ஸ் கார்பந்தயத்தில் மின்னல் வேகத்தில் சென்ற ஜப்பானின் ஹயனாரி ஷிமோடாவின் கார் நிலைதடுமாறி அந்தரத்தில் தலைகீழாக பறந்தது. நல்ல வேளை சிறிது காயத்துடன் உயிர் தப்பினார் ஹயனாரி



செல்சியா அணிக்கு எதிராக கோல் அடிக்கும் மான் யூனைட்டட் அணி வீரர்.





[illegible] அரங்கில் இரட்டை சகோதரர்கள் பாலச் [illegible] தனைக் கவனித்தனர். இந்தக் குட்டிகள் இந்திய, இலங்கை அணியின் உடை அணிந்து ஒற்றுமையை வெளிப்படுத்தினர்.



# இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியில் இஷாகுகா என்ற இந்திய வீராங்கனை



இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொள்ளவிருக்கும் இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியில் கொல்கத்தாவைப் பிறப்பிடமாகக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த இஷாகுகா என்ற பெண்ணும் இடம் பிடித்துள்ளார்.இங்கிலாந்திலிருந்து அடிக்கடி தனது தாய் நாட்டுக்கு பெற்றோருடன் வருகை தந்த போதும் அவர் கிரிக்கெட் வீராங்கனையாக இதுவரை வந்து போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை. இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான இவர் இந்திய சுற்றுப்பயணம் தனக்கு புதிய அனுபவத்தைத் தரும் எனத் தெரிவிக்கிறார். அண்மையில் அவுஸ்திரேலிய பெண்கள் அணிக்கும் இங்கிலாந்து பெண்கள் அணிக்கும் இடையிலான [illegible] ஆஷஸ் தொடரில் இவர் பங்கேற்றுள்ளார். இதில் இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியது.இந்தத் தொடரை கைப்பற்றியதை ட்ரபல் கார் சதுக்கத்தில் கொண்டாடியது தனக்கு மறக்க முடியாது என இஷாகுகா தெரிவித்துள்ளார்.இங்கிலாந்து பெண்கள் அணி சிறிலங்காவில் இரு ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்ட பின்னர் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரு டெஸ்ட் ஐந்து ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்ளும். குகா மேலும் தெரிவிக்கும் போது, தனது பெற்றோர் கொல்கத்தாவைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் இங்கிலாந்து அணிக்காக ஆடும் தனக்கு உற்சாகம் தெரிவிப்பதாகக் கூறுகிறார்.





## சிந்தனைக்கு

தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்வுக்கு மூலாதார மானது; தனியரசு நிர்வாகத்திற்கு அத்திவாரமானது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 08.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com


## அவமதிக்கும் செயல்...!

சனாதிபதித்தேர்தலையொட்டி விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்களுக்காக அமைக் கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றுவதற்கென மேலதிகமாகக் கொழும்பில் இருந்து அதிகாரிகளை அனுப்பி வைக்கத் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யானது தமிழ் அதிகாரிகளை அவமதிக்கும் செயலாகவே கொள்ளத்தக்கது.

இத்தகையதொரு முடிவுக்கு தேர்தலில் போட்டியிடும் வேட் பாளர்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப் பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தரப்பில் இருந்து தெரிவிக் கப்பட்டிருப்பினும், இது அடிப்படையில் தமிழ் அதிகாரிகள் மீது நம்பகத்தன்மை இல்லை என்பதை வெளிப்படுத்துவதாகவே கொள்ளத்தக்கது. அத்தோடு, சிறிலங்கா ஆளும் வர்க்கம் தமது மேலாண்மையை வெளிப்படுத்தும் ஒன்றுமாகும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிறிலங்கா அரசின் நடைமுறைகள், சட்டதிட்டங்கள் என்பன அமுல்படுத்தப் படாமலும் கண்டுகொள்ளப்படாமலும் இருப்பினும் அரசின் பல பணிகள் இடம்பெறாமலும் இல்லை. ஆனால் இவற்றில் மோசடிகள் இடம்பெற்றதாகவோ, திருட்டுக்கள் இடம்பெற்றதாகவோ தகவல் களில்லை.

எடுத்துக்காட்டாக சிறிலங்கா அரசு நடாத்தும் தேசிய பரீட்சை கள் எந்தவித மோசடிகளும் இன்றிப் பாராட்டும் வகையில் நடை பெறுகின்றன. அரச வங்கிகள் எத்தகைய பாதுகாப்பும் இன்றி அதேவேளை மோசடிகளே இன்றிச் செயற்பட்டும் வருகின்றன. இவற்றின் செயற்பாடுகள் குறித்து பொதுவில் திருப்தியும், பாராட்டுதலுமே தெரிவிக்கப்படுவதுண்டு.

இதேவேளை சிறிலங்காவின் பல்வேறு துறைகளிலும் குறிப்பாக நீதித்துறை வரை ஊழல் மோசடிகள் நிறைந்துள்ளன. அதேபோன்று தேர்தல் மோசடிகள், வன்முறைகள் என்பனவுமே வழமையாகிவிட்டவை. வீட்டைவிட்டு புறப்பட்டுச் செல்லும் ஒரு கட்சி சார்ந்தவர் திரும்பி வீட்டுக்கு வந்து சேருவாரா என்பது குறித்த அச்சமே பொதுவில் உள்ளது. அந்தளவிற்குத் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதனைத்தவிர தேர்தல் விதிகளுக்கு மாறாக ஆட்சியிலுள்ள வர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் அரச இயந்திரம் தவ றாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை ஊர்ஜிதம் செய்யக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் தற்பொழுது பெரும் விமர்சனத் திற்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக அரச உடமைகளை வளங்களைத் தமது தேவைக் காகப் பயன்படுத்துதல், உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை அரச உலங்குவானூர்திகளைத் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன் படுத்துதல், தேர்தல் பணிக்கு உபயோகித்தல், தேர்தல் அனு கூலத்திற்காகப் பதவி மற்றும் அதிகாரங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தல் போன்றவற்றில் மகிந்த ராஜபக்ஷ சட்டம் ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டவராகச் செயற்படவில்லை.

இவை குறித்துத் தொடர்ச்சியாக எதிர்க்கட்சியினர் முறையிட்டு வருகின்ற போதும் மகிந்தராஜபக்ஷவோ அன்றி ஆளும் தரப்பில் வேறு யாருமே நடவடிக்கைகளை நிறுத்தவோ, கட்டுப்படுத்தவோ தயாராக இல்லை. அதிலும் குறிப்பாக அரசின் தகவல் ஊடகங் களை ஒருதலைப்பட்சமாகச் செயற்பட வைப்பதையும், அரச ஊட கங்களைத்தமது தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதையும் அவர்கள் கைவிட்டதாக இல்லை.

ஆனால் தேர்தல் மோசடி என்பது தனியாக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அன்றிச்சனாதிபதி வேட் பாளர் மகிந்த ராஜபக்ஷ காலத்தில் மட்டும்தான் நடை பெறுமென்பதல்ல. இதற்கு பல சிங்கள அரசியல்வாதிகள் ஏற் கனவே முன்னோடியாக உள்ளனர். சிறிலங்கா அரசியல் யாப்பும், தேர்தல் முறையும் கூட இந்த வகையில் ஒருவகை மோசடித் தனமானதே ஆகும்.

இதேவேளை சிறிலங்காவில் நடைபெறும் தேர்தல் விதி களுக்கு மாறான நடவடிக்கைகள், வன்முறைகள் என்பன தொடர் பாக தேர்தல் ஆணையாளரிடம் பல தடவை முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோதும் அது குறித்து அவர் முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக இல்லை. இத்தகைய மோசடிகள் குறித்து சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் செய்த புகார்களுக்குக் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இல்லை.

இத்தகையதொரு நிலையில் வடக்குக் கிழக்கில் தேர்தலைக் கண்காணிக்க மேலதிக அதிகாரிகளை அனுப்ப முயல்வதானது ஏதோ வடக்கு கிழக்கில் நடைபெறப்போகும் தேர்தல் மோசடிகளால் சிறிலங்காவின் சனநாயகப் பாரம்பரியமே கெட்டுவிடப் போவது போன்று கொழும்பிலிருந்து சிங்கள அதிகாரிகளை அனுப்பத் தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ள தீர்மானம் உள்ளது. வடக்கில் நடந்த தேர்தல் வரலாற்றில் மிக மோசமான தேர்தல் 1981 இல் நடந்த மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலே ஆகும். இத்தேர்தலிலேயே சிங்கள அதிகாரிகள் பணிகளில் முதன் முதலில் ஈடுபட்டிருந்ததனர் என்பது மனதிற்கொள்ளத்தக்கதே.




# மீண்டும் அரசியலுக்கு வந்தார் ஐ.தே.க வின் ஏ.எம்.எஸ் அதிகாரி!

ஐக்கியதேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஏ.எம்.எஸ். அதிகாரி மீண்டும் தீவிர அரசியலில் இறங்கியுள்ளார்.

கலவானயில் உள்ள தனது இல்லத்தில் ஊடகவியலாளர் சந்திப் பில் இது தொடர்பான அறிவிப்பை ஏ.எம்.எஸ். அதிகாரி வெளியிட்டார். அவர் கூறியதாவது:

நாட்டின் எதிர்காலத்தைத் தாங்கு கிற பொறுப்பு ரணில் விக்கிரமசிங்க வுக்குத்தான் உள்ளது. அதனால் கடந்த கால வேறுபாடுகளை மறந்து நாம் அனைவரும் ரணிலின் வெற்றிக் காக பாடுபடுவோம். எம்மை மீண்டும் அரசியலில் ஈடுபடுமாறு சிறிசேன கூரேயும் மிலிந்த மொறகொடவும் வலியுறுத்தினர். வட மத்திய மாகாண தேர்தல் ஒருங்கிணைப்பாளராக நிய மிக்கப்பட்டுள்ள நாம் கிராமந்தோறும் சென்று ரணிலுக்காக பிரச்சாரம் செய்ய உள்ளோம். முன்னைய தேர் தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேம தாச ஆகியோர் வெற்றி பெறுவதற்கு நாம் பாடுபட்டோம். காமினி திசா நாயக்க கொல்லப்படாது இருந்திருந் தால் அவரையும் வெற்றிபெற வைத் திருப்போம். ரணிலின் வெற்றி உறு திப்படுத்தப்பட்டுவிட்டது. மகிந்த ராஜ பக்ஷவுக்கு அவரது சுதந்திரக் கட்சி யிலேயே பிரச்சினை உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவினால்தான் இன் னொரு யுத்தத்தை தவிர்க்க முடியும் என்றார்.

# உலகின் சக்திவாய்ந்த பெண்களில் சந்திரிகாவிற்கு 25ஆவது இடம்

சர்வதேச போர்ப்ஸ் சஞ்சிகை யினால் அண்மையில் வெளியிடப் பட்ட உலகின் சக்திவாய்ந்த 100 பெண்களின் பட்டியலில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு 25 ஆவது இடம் கிடைத்துள்ளது.

சர்வதேச சமூகத்தின் மீது அதிக அழுத்தங்களைக் கொடுக்கக்கூடிய 100 பெண்களின் பெயர்கள் இப்பட்டி யலில் உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இந்தப் பட்டியலின் முத லிடத்தில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொண்டலிசாரைஸ் உள்ளார். அமெரிக்காவின் முன்னாள் முதல் பெண்மணியான ஹிலாரி கிளிங்டன் இந்தப் பட்டியலில் 26 ஆவது இடத்தையும் இங்கிலாந்து பிரதமரின் மனைவி இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளனர். இந்தப் பட்டியலில் இங்கிலாந்து மகாராணி எலிசபெத்திற்கு 75 ஆவது இடமே கிடைத்துள்ளது.

# தபால்மூல வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக் கான தபால் மூலமான வாக்களிப்பு கள் நேற்று திங்கட்கிழமை தென் பகுதியில் வன்முறை ஏதுமின்றி நடைபெற்றுள்ளது. மூன்று இலட் சத்து 23 ஆயிரத்து 428 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அம்பாறை மற்றும் நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தபால் மூலம் வாக்களிக்க கல் முனைக்குச் செல்ல வேண்டியிருந்த தால் அவர்கள் எதிர்ப்பினை வெளிப் படுத்தினர். நேற்றைய வாக்களிப்பு பொதுவில் வன்முறைகளின்றி அமைதியான முறையில் நடை பெற்றதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்துள்ளார். பொலநறுவையில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களில் அரைவாசிப் பேரளவில் வாக்களித்துள்ளதாகத் தெரிகிறது. இன்றும் தபால் மூலமான வாக்களிப்பு நடைபெறும்.

# பிரதியமைச்சர் சூரியாராச்சிக்கெதிராக ம.உ. ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராச்சி பூகொட பொலிஸ் அதிகாரியை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

சனாதிபதி தேர்தலுக்கான சட்ட விரோத சுவரொட்டிகள் மற்றும் உருவப்பதாகைகள் ஆகியவற்றை பொலிசார் அகற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதியமைச்சர் இந்த அச்சுறுத்தலை விடுத்ததாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. தொலைபேசி மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள தாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (32)

# தேர்தல் கண்காணிப்பாளர்கள் வவுனியாவிற்கு வருகை

எதிர்வரும் 17 ஆம் திகதி நடை பெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்ட வாக்களிப்பைக் கண் காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றி யத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் வவுனியாவிற்கு வருகை தந்துள்ளனர்.

வவுனியாவிற்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண் காணிப்பாளர்கள் இருவர் கடந்த வெ ள்ளிக்கிழமை வவுனியா அரசசெயல கத்திற்குச் சென்று வவுனியா அரச அதிபர் சி.சண்முகத்தைச் சந்தித்து கலந்துரையாடியபின் வன்னித் தேர் தல் அலுவலகத்திற்குச் சென்று அங்கு உதவித் தேர்தல் ஆணையாளர் கருணாநிதியைச் சந்தித்து நிலை மைகளைக் கேட்டறிந்து கொண்ட னர். (10)

# வரவு-செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் எதிர்ப்பை கைவிடுகிறது ஐ.தே.கட்சி

சிறிலங்கா அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்ட அறிக்கை இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக வரவு-செலவுத்திட்டத்தை தாக்கல்செய்வதை கடுமையாக எதிர்த்து வந்த ஐக்கிய தேசியக்கட்சி அது நிலையிலிருந்து தற்போது பின்வாங்கியுள்ளது.

நேற்று கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, தேர்தலுக்கான வரவு-செலவுத்திட்ட அறிக்கையாக தயாரிக்க வேண்டாம் என்று நிதி அமைச்சருக்கு சந்திரிகா அறிவுறுத்தியுள்ளார். நாம் அவரது அறிவுறுத்தல் ஏற்கப்படும் என்று நம்புகிறோம். இன்று தாக்கல் செய்யப்படும் அறிக்கை சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபகஷவின் தேர்தல் இலாபங்களை மையப்படுத்தி இருந்தால் எதிர்ப்போம் என்றார் அவர்.

இதனிடையே வரவு-செலவுத் திட்ட அறிக்கை தொடர்பாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அவர் கூறியதாவது;

அடுத்த ஆண்டுக்கான நாட்டினது பொருளாதார இலக்கு ஆறுவீதமாக இருப்பதற்கான வலுவான அடித்தளத்தை சந்திரிகா குமாரதுங்க உருவாக்கியுள்ளார். எண்ணெய் விலை உயர்வு, ஆழிப்பேரலை பாதிப்புகள் இருந்தபோதும் நாட்டினது பொருளாதாரம் சிறப்பாக உள்ளது என்றார்.

பாராளுமன்றில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட உத்தேச வரவு-செலவுத்திட்ட அறிக்கையில், சிறிலங்கா இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு 700 மில்லியன் அமெரிக்கா டொலராக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டைவிட 23 வீதம் கூடுதலானது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து நட்வர்சிங் நீக்கம்

(டில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கை இந்தியா பிரதமர் மன்மோகன்சிங் வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியுள்ளார். எனினும் அவர் அமைச்சரவையில் இலாகா அற்ற அமைச்சராக இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் நாட்டுக்கான ஐ.நா வின் உணவுக்காக எண்ணெய்த் திட்டத்தில் ஊழல் நடைபெற்றதாகவும் இதில் நட்வர் சிங்கிற்கும் தொடர்பிருப்பதாகவும் இது தொடர்பாக ஆராய்ந்த வோல்கர் குழு அறிக்கை சமர்ப்பித்திருந்தது. நட்வர் சிங் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டதும் அவருக்கு மீண்டும் பதவி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

---

**தமிழர்...** இனத்தைச்சேர்ந்த யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழினத்திற்கு எந்தவித விமோசனமோ தீர்வோ கிடைக்கப் போவதில்லை. பேரினவாதக் கொள்கைகளோடு தேர்தலில் போட்டியிடும் சனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் வழங்குகின்ற வாக்குறுதிகளை நம்புவதற்கு தமிழர்கள் ஏமாளிகள் அல்ல. கடந்த காலங்களில் பேரினவாத அரசு தமிழர்களிற்கு எதிராக இழைத்த அநீதிகள் ஆக்கிரமிப்புக்கள், சித்திரவதைகள் போன்றவற்றை மறந்து தமிழ் பேசும் மக்களாகிய நாம் சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது என்பது எந்தளவிற்கு சாத்தியமான தொன்றாக அமையும்.

கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக இருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா, ஆர்.பிறேமதாச, டி.பி விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க போன்றோரின் பேரினவாதக் கொள்கையின் அடிப்படையிலேயே தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செயற்படுவார்கள் என்பது வரலாற்று உண்மை. பேரினவாதிகளின் கடந்தகால ஆட்சியின் போது தமிழர் தாயகப் பிரதேசங்களில் பெரும் தமிழினப் படுகொலைகளை நடாத்தி பல்லாயிரக்கணக்கான எம் உறவுகளை அழித்தனர்.

பொருளாதாரவளங்களை அழித்தது மட்டுமல்ல இறுக்கமான பொருளாதாரத் தடைகளைப் போட்டு எமது வாழ்வியலைச் சிதைத்தனர்.

பயங்கரவாதத்தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் மூலம் பல இளைஞர் யுவதிகளை கைது செய்தும் சித்திரவதை செய்தும், பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொண்டும், சிறையில் அடைத்தும் கொலை செய்தனர் இவைமட்டுமல்ல இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை நிராகரித்துச் செயற்பட்ட இவர்கள் கடந்த காலங்களில் தமிழினத்திற்கு உருப்படியான எந்தவொரு தீர்வும் கிடைக்கக் கூடாதென்பதில் உறுதியுடன் செயற்பட்டவர்கள். இவர்களில் இனவாதசக்திகளோடு கூட்டுச் சேர்ந்துள்ள மகிந்தராஜபக்ஷவும், ரணில்விக்கிரமசிங்கவும் உருவங்கள் வேறுபட்டாலும் கொள்கைகளிலும் பேரினவாதப் போக்கிலும் ஒன்றுபட்டவர்களாகவே உள்ளனர்.

எனவே வரலாற்றினை அனுபவங்களாகப் பெற்ற தமிழ் மக்களாகிய நாம் சனாதிபதித்தேர்தலைப் புறந்தள்ளி வாக்களிப்பில் இருந்து விலகிக்கொள்வோம் எம்மையும் எமது இனத்தின் இருப்பையும் அழித்தொழிப்பதற்கு உறுதியுடன் போட்டியிடும் வேட்பாளர்களையும் சனாதிபதித் தேர்தலையும் தமிழ் மக்களாகிய நாம் நிராகரிப்போம்.

---

**ஜே.வி.பி..** அத்துடன் கடற்படையும் வான்படையும் மறுசீரமைக்கப்படும். இது யுத்தத்துக்காக என்று அல்லாது இலங்கைக்கான கடற்போக்குவரத்துக்கு பாதுகாப்பு வழங்கவே இவ்வாறு மறுசீரமைக்கப்படவுள்ளது. அதாவது எதிர்காலத்தில் ஆசியப் பிராந்தியம் உலகிலேயே பொருளாதார பலம்பெற்ற பிராந்தியமாக விளங்கப்போகிறது. எனவே கடற்பிராந்தியத்தில் பயணிக்கும் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அவசியம்.

அதேவேளை சர்வதேச பயங்கரவாதிகளால் சாதாரண விமானங்களைப் பயன்படுத்தி பாரிய தாக்குதல்களை நடத்த முடியும் என்பது செப்ரெம்பர - 11 தாக்குதல் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவற்றிலிருந்து பாதுகாக்க வான்படையைப் பலப்படுத்துவது அவசியம் என்றார்.

மேலும் மில்லேனியம் சிற்றியில் இருந்த இராணுவப் புலனாய்வாளர்களைக் காட்டிக்கொடுத்ததாக ரணில் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக் குறித்து ஊனமுற்ற படையினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க,

மேலைத் தேயத்தில் இராணுவப்புலனாய்வுப்பிரிவில் குறிப்பிட்ட அதிகாரிகள், குறிப்பிட்ட சில ஆண்டுகள் மட்டுமே இருப்பார்கள். ஆனால் இங்கு ஆயுட்காலத்துக்கும் புலனாய்வு அதிகாரிகளாகப் பதவி வகிக்கின்றனர். கப்டன் நிலாமை விடுதலைப்புலிகளுக்கு மில்லேனியம் சிற்றி விவகாரத்துக்குப்பின் தான் தெரியும் என்பதல்ல. அவர் மட்டக்களப்பு இராணுவ முகாமில் கடமைபுரியும்போதே புலிகளுக்கு அவரைத்தெரியும். லெப்.கேணல் முத்தலிப், கேணல் மீடின் போன்றோரின் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும்.

எனது ஆட்சிக்காலத்தில் அமெரிக்கப்புலனாய்வுத்துறையும், இந்திய புலனாய்வுத்துறையும் புலனாய்வு அதிகாரிகளின் பாதுகாப்பு தொடர்பாக அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தன. அதனை நடைமுறைப்படுத்த முன் எனது ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அத்துடன் அந்த அறிக்கைகளை இந்த அரசாங்கம் கிடப்பில் போட்டு விட்டது.

முத்தலிப்பிற்கும் மீடினுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த போதும் அதனைச் சரிவரப் பயன்படுத்தவில்லை என்றார்.

ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்; இலங்கையின் பத்து வீதமான நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனடிப்படையில் நாட்டை ஒற்றுமைப்படுத்த அதிகாரப்பரவலாக்கல் மேற்கொள்ளப்படும். மூவின மக்களையும் இணைத்துப் போராட்டம் நடத்தியே டி.எஸ் சேனநாயக்க சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தார். அவர் வழியில் மூவின மக்களையும் இணைத்து சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்றார்.

---

**நவீன்..** கத்தை ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்காவிட்டால் நாம் எமது ஆதரவை மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

எமது கருத்தை ஏற்றுக்கொண்டு உரிய விளக்கத்தை ஐக்கிய் தேசியக் கட்சி அளிக்க வேண்டும. அப்போது தான் மலையக மக்கள் முன்னணி நம்பிக்கை கொள்ளும் என்று அதில் பெரியசாமி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமாதானத்தை உருவாக்கும் முயற்சியாக மூன்றாம் தரப்பான நோர்வேயின் அனுசரணையுடன் வெளிநாடுகளில் சிலமுறை அமைதிப் பேச்சுக்களை நடத்தினார்கள். அப்பொழுது கருணாவை இந்த சமாதானப் பேச்சுக்கு வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதித்தது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு. அதன் மூலம் அவர் வெளியுலக அனுபவத்தைப் பெற்றார். பின்னர் சிறிலங்கா அரசாங்கத்தின் ஆதரவுடன் தான் தனியாகக் குழுவை அமைத்துப் புலிகளுக்கு எதிராகச் செயலாற்றச் சென்றார். இவ்வாறு அமைந்தற்குக் காரணமே ரணில் விக்கிரமசிங்கதான்.

இந்த நிலைமைகளையும் மீறி யுத்தம் ஒன்றைப் பிரபாகரன் ஆரம்பித்தால் அந்த யுத்ததிற்கு எங்கள் இராணுவத்தை நாம் அனுப்ப வேண்டிதில்லை. அதற்குப் பதிலாக இந்திய இராணுவமும். அமெரிக்க இராணுவமும் தான் அத்தகைய யுத்தத்தில் ஈடுபடும். இதற்கான அடிப்படை ஒப்பந்தப் பேச்சுக்களை ரணில் விக்கிரமசிங்க இந்திய நாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியுடனும் அமெரிக்க நாட்டுத் தலைவர் ஜோர்ஜ் புஷ்ஷுடனும் நடத்தியுள்ளார் என்று நவீன் திசாநாயக்க நுவரெலியாவில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியமை குறித்தே சந்திரிசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

---

**ஒட்டுப்படை..** கறுப்பாளையைச் சேர்ந்த கனகசுந்தரம் சுரேஸ் (வயது 16), மாங்கேணி மதுரங்குளத்தைச் சேர்ந்த செல்வம் பாபு (வயது 15), கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சண்முகம் சர்வராஜா (வயது 21) ஆகிய மூவருமே இவ்வாறு சரணடைந்தவர்களாவர்.

கறுப்பாளையைச் சேர்ந்த கனகசுந்தரம் சுரேஸ் கருத்துத் தெரிவிக்கையில்:-

நான் கூலித்தொழிலான மில் வேலை மற்றும் வயல் வேலை செய்பவன். முறக்கொட்டாஞ் சேனையிலுள்ள உறவினர் வீட்டில் நின்று கூலி வேலை செய்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது வெலிக்கந்தையில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் பிடித்தனர்.

பிடித்து கருணா குழு எனக் கூறும் ஒட்டுப் படையினிடம் ஒப்படைத்தனர். அவர்கள் ஒரு நாள் இருட்டு அறைக்குள் பூட்டி வைத்தனர். மறுநாள் சித்தா மற்றும் சிலர் என்னை அவர்களுடன் இணைந்து செயற்படுமாறும் மாதம் ஆறாயிரம் ரூபாய் தருவதாகவும் [illegible] கட்டாயப்படுத்தினர். [illegible] ஆறுநாள் பயிற்சி [illegible] என்னையும் [illegible] விடுதலைப் [illegible] கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரைச்சிவெட்டைக்கு அனுப்பினார்கள்.

என்னுடன் வந்த இளைஞர் [illegible] புலி உறுப்பினரைச் சுட்டதும் அவரிடம் இருக்கும் அடையாள அட்டை மற்றும் பொருட்களை எடுத்து வருமாறும் கூறியிருந்தனர். இவ்வாறு வந்து தங்கி நின்ற போது தான் பிடிபட்டதாகவும் மற்றைய நபர் ஓடி விட்டதாகவும் தெரிவித்தார். தறபோது எதுவித பயமுமின்றி இருப்பதாகவும் கூறினார்.

மாங்கேணி மருதங்குளத்தைச் சேர்ந்த செல்வம் பாபு (வயது-15) தெரிவிக்கையில்:-

நான் கூலி வேலை செய்பவன். ஓமடியார் மடுவில் வேலை செய்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது ஒட்டுப் படையைச் சேர்ந்த ராஜிகுமார், ரங்கன், மாயவன் ஆகிய மூவரும் என்னைப் பிடித்தனர்.

எங்களோடு நில்லு உனக்கு மாதம் ஆறாயிரம் ரூபா சம்பளம் தருவோம் எனக் கூறினர். பின்னர் தீவுச்சேனைக்குக் கொண்டு சென்றனர். அங்குதான் ஒட்டுப் படையினர் முகாமிட்டுள்ளனர். அங்கு ஐந்து நாள் பயிற்சி தந்தார்கள்.

பின்னர் வாகரை, கட்டுமுறிவுக் குஞ்சன் குளத்தில் நடைபெற்ற தாக்குதலுக்குக் கூட்டிச் சென்றனர். (30.10.2005) அங்கு விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் ஆமிக்காரர்களும் வந்தார்கள். இவர்கள் சிங்களம் பேசினார்கள். பின்னர் மகேசன் என்னும் போராளி மீது கைக்குண்டை வீசி விட்டு வா. உனக்கு பத்தாயிரம் ரூபாய் தாரன். அதன் பின்பு வீட்டுக்குப் போகலாம் எனத் தெரிவித்தனர். நான் கைக்குண்டையும் எடுத்துக் கொண்டு விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தேன் எனத் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சண்முகம் சர்வராசா (வயது 21) தெரிவிக்கையில்:-

நான் வெளிநாடு சென்று கட்டாரில வேலை செய்தேன். அப்போது ஒட்டுப் படையிலுள்ள மார்க்கன் என்னோடு தொடர்பு கொண்டு நீ கொழும்பு திரும்பு உனக்கு வேறு நாட்டில் நல்ல வேலை பெற்றுத் தருகிறேன் என்றார். அவர் வெளிநாட்டு முகவர் நிலையம் நடத்துவதாகவும் குறிப்பிட்டார். அதனை நமபி நான் கொழும்பு திரும்பிய போது விமான நிலையத்தில் காத்திருந்த மார்க்கன் என்னை ஏற்றிக் கொண்டு தீவுச்சேனைக்குக் கொண்டு வந்தார்.

சேவூர என்ற முகாமுக்குக் கூட்டிச் சென்று என்னை படையினரிடம் அறிமுகப்படுத்தினார். இவர் எங்களுடைய ஆள். வெளிநாடு சென்றிருந்தவர். தற்போது வந்திருக்கிறார். இவர் போக்குவரத்துச் செய்யும் போது ஒத்துழைப்பு வழங்குமாறு கூறியிருந்தார்.

பின்னர் தாக்குதலுக்குப் போகும் முன்பு படை முகாமுக்குப் போவார்கள். அங்கு ஆயுதங்கள், துப்பாக்கிரவைகள், கைக்குண்டுகள் எல்லாம் வழங்கப்படும். ஆமிக்காரர்களும் ஒட்டுப் படையினரின் முகாமுக்கு வந்து போவார்கள் எனத் தெரிவித்த சர்வராசா ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்:-

தற்போது தீவுச்சேனையில் 65 ஒட்டுப் படையினர் உள்ளனர். இவர்களில் அநேகமானோர் முதியவர்கள். தொழிலில்லாது கஸ்டப்பட்டவர்களுக்கு மாதம் ஆறாயிரம் தருவதாகக் கூறியே இணைத்து வைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

திருமலையில் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான டிக்கான் மீது தாக்குதல் நடத்தியது சிறிலங்கா கடற்படையினர் தான். ஏனெனில், சிறிலங்கா கடற்படையினர் வந்து இவர்களையும் கூட்டிச் சென்றனர் என்றார்.

இறுதியாக மட்டக்களப்பு பற்பொடி கம்பனியிலுள்ள சிறிலங்கா படை புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியான குமாரசேன என்பவர் இராணுவ வாகனத்தில் ஏற்றிக் கொண்டு 25.09.2005 அன்று இரவு மண்முனை ஐந்தாம் கட்டை எனும் இடத்திற்கு என்னைக் கொண்டு வந்தனர். அங்கே மண்முனை சிறிலங்கா அதிரடிப் படையினரின் வாகனம் வந்தது. அதில் குமாரசேன என்னை ஏற்றி விட்டு ஒரு ரைபிளைத் தந்து கொக்கட்டிச்சோலைக்குப் போய் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரைச் சுட்டு விட்டு வருமாறு கூறினார்கள்.

அதிரடிப் படையினர் மண்முனைக்கு வந்ததும் மீன்பிடி தோணிகளில் ஏற்றி என்னை கொக்கட்டிச்சோலைக்கு அனுப்பினார்கள். நான் விடுதலைப் புலிகளிடம் வந்து சேர்ந்தேன் என்றார்.

---

**தபால்...** சுமார் மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க விண்ணப்பித்த போதிலும் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களே வாக்களிப்பில் கலந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றும் நேற்றும் இடம் பெறுவதாக இருந்த இத் தபால் மூலமான வாக்களிப்பு சில இடங்களில் நேற்றுடன் முடிவடைகின்றமையும் குறிப்பிடத் தக்கதாகும் இவ்வாறு நாட்களைக் குறைத்துக் கொண்டமைக்கு யாழ்ப்பாணத்தில் திடீர் திடீரென இடம்பெறும் படையினர் மீதான தாக்குதல்களும் காரண மாகும்.தென் பகுதியைப் பொறுத்த வரையில் இரண்டு நாட்களும் மற்றும் விடுபட்டவர்கள் வாக்களிக்க மூன்றா வது நாளும் வழங்கப்பட்டுள்ள மையும் சுட்டிக் காட்டக்கூடியதாகும். எனினும் வாக்களிப்புக்களை தடுத்து நிறுத்தும பொருட்டோ அல்லது வாக்காளர்களது சுதந்திரமான வாக்களிப்புக்கு இடையூறு தரும் விதத்திலோ எந்தவிதமான வன்முறைகளும் யாழ். மாவட்டத்தில் இடம்பெறவில்லை என்று யாழ். மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் பவ்ரல் அமைப்பின் யாழ் மாவட்ட இணைப்பாளர் நிர்மானுஜன் கூறினார்.

(41)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.